www.tamilarangam.net



# சுவடுகள்

## யாருக்கு தமிழர் வாக்குகள் ?

www.tamilarangam.net

**SUVADUGAL,**
**A Tamil monthly from Norway**
Estd: Sept'1988

**Bank account**: 16075213062
SparebankenNOR

ISSN: 0804 - 5712

**Editorial Group**: Thuruvapalagar

Price: 25NKr
Subscription: 300NKr/ 12 issues

**Published by**:
Norway Tamil Culturel Centre
**Address:**
Suvadugal,
Herslebs gt43,
0578 Oslo,
NORWAY

**சுவடுகள்,**
தமிழ் மாத இதழ்
ஸ்தாபிதம்: புரட்டாத'1988

வங்கிக் கணக்கிலக்கம்: 16075213062
ஸ்பாரபாங்கன் நூர்

ஆசிரியர் குழு:
துருவபாலகர்

தனிப்பிரதி விலை: 25 குறோணர்கள்
சந்தா:
பன்னிரு இதழ்களுக்கு 300 குறோணர்கள்

வெளியீடு:
நோர்வே தமிழ்க் கலாசார மையம்
முகவரி:
சுவடுகள்,
ஹேர்சிலப்ஸ் காதா 43,
0578 ஒஸ்லோ,
நோர்வே.

**சுவடுகள்** 68

ஆனி 1995

நிறுவியது: புரட்டாதி 1988

இந்த இதழில்

தமிழர் வாக்குகள்.............................. 3
நூல் நயம்.............................................. 6
சிறுகதை................................................ 11
மாகாண, நகர சபைத் தேர்தல்..................13
தேசத்தின் குறிப்புகள்............................ 17
புகைப்படக் கலை................................... 19
தாய்மொழிக் கல்வி................................ 24
என் தாத்தா பேசுகிறார்......................... 26
சுவடுகள்................................................ 28
வியட்னாம் விடுதலை............................ 29
கண்டது, கேட்டது,................................. 31
தமிழகத்தில் குற்றப் பரம்பரையாக.......... 34
நிலாக்கதையும் என் பாட்டியும்.............. 36
அவள்..................................................... 41
இலங்கைக்கு வந்த நோர்வீயியர்............ 50
தேவை தண்டனை................................. 51

அடுத்த இதழில்;
* செ.கணேசலிங்கனின் பேட்டி
* 'மண் மனம்' தொடர் கதை

Svadugal, A Tamil monthly from Norway, Issue nr 68.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# தமிழர் வாக்குகள்!

• கேசவன்

இன்னும் சில தினங்களில் நிகழவுள்ள நோர்வேயின் உள்ளூராட்சி மற்றும் மாநில அவைகளுக்கான தேர்தலே மிக அதிக தமிழர்கள் பங்குகொள்ள உள்ள தேர்தல் ஆகும். நான்கு வருடங்களுக்கு ஒருமுறை இத்தேர்தல்கள் நிகழ்கின்றன. கடந்தமுறை இத் தேர்தல்கள் நிகழ்ந்தபோதும் கணிசமான தமிழர்கள் வாக்களிக்கத் தகுதி பெற்றிருந்தனர். இப்போது அதைவிடச் சற்று அதிகமானோர் வாக்களிப்பிற்கான தகுதி பெற்றுள்ளனர். பாராளுமன்றத் தேர்தல்களைப் போலன்றி, இத்தேர்தல்களில் நோர்வேப் பிரஜாவுரிமை பெறாத (ஆனால் இங்கு வசிக்கும்) வெளிநாட்டவர்களும் வாக்களிக்கலாம் என்பதால் எப்போதும் சிறு அளவிலாவது தாக்கத்தை ஏற்படுத்தக் கூடியதாக வெளிநாட்டவரின் வாக்குகள் உள்ளன.

நோர்வேயில் ஒஸ்லோ நகரமே மிக அதிகளவு வெளிநாட்டவரைக் கொண்ட பிரதேசம். இங்கு வாழ்பவர்களில் ஏறத்தாழப் பத்து வீதத்தினர் வெளிநாட்டவர்கள். நோர்வேயில் தமிழ் மக்கள் பெரும்பாலும் நகர்ப் பகுதிகளிலேயே மையங் கொண்டுள்ளனர். நோர்வேயில் வாழும் தமிழர்களில் குறைந்தது மூன்றில் ஒரு பங்கினர் ஒஸ்லோவில் வாழ்கின்றனர். இவர்களில் கணிசமானோர் இந்தத் தேர்தலில் வாக்களிக்கத் தகுதி பெற்றுள்ளனர்.

வெளிநாட்டவர்கள் அதிகம் வசிக்கும் ஒஸ்லோவில், ஆட்சியைப் பிடிக்க விரும்பும் கட்சி வெளிநாட்டவருக்குச் சார்பான போக்குகளை (சும்மாவாவது) காட்ட நினைப்பது இயல்பே. சகல வெளிநாட்டவர்களாலும வெறுக்கப்படும்முன்னேற்றக்கட்சியின்தலைவர் காள் இ ஹாகன் (Carl I Hagen) அண்மையில், வெளிநாட்டவர் - குறிப்பாகப் பாகிஸ்தானியர் - வசிக்கும் ஒஸ்லோவின் பகுதி ஒன்றில் வெளிநாட்டுக் குழந்தைகளுடன் உதைபந்தாட்டம் விளையாடியதைத் தொலைக்காட்சியில் பலர் பார்த்திருக்கக் கூடும். தேர்தல் வந்தால் எல்லா அரசியல்வாதிகளும் ஏறத்தாழ ஒரே மாதிரித்தான். அண்மையில் பிரதமரையே சாதாரண மக்கள் பயணம் செய்யும் சுரங்கரயிலில் (T bane) காண முடிந்தது.

கட்சிகளின் சாயங்கள் சில வேளைகளில்




உடனடியாக வெளுப்பதில்லை. எனவே வாக்களிக்க முன்பு கொஞ்சம் ஆறுதலாக யோசிப்பது நல்லது. தொலைக்காட்சிகளில் நிகழும் தேர்தல் விவாதங்களில் சில கட்சிகள் தமது சாயத்தை வெளுக்கின்றன. தொலைக்காட்சிச் செய்தியாளர்கள் தமது மதிநுட்பத்தாலும், ஞாபக சக்தியாலும் எல்லாத் தலைவர்களையும் வறுத்து எடுத்து விடுகிறார்கள். இவற்றைப் பார்த்தே மனம் மாறும் வாக்காளர்கள் உண்டு. இப்போது நிகழ்வது உள்ளூராட்சித் தேர்தல்கள்தானே என்று அசட்டையாக இருந்து விடாமல் வாக்களிப்பது நல்லது. ஏனெனில் இலங்கை போலன்றிப், பல விவகாரங்கள் இங்கு உள்ளூர் மட்டத்திலேயே தீர்மானிக்கப் படுபவை. தமிழர்களது வாக்குகள் எவ்வாறு ஒரு தீர்மானிக்கும் சக்தியாக விளங்கும் என்று எதிர்வுகூறுவது கடினம். ஆனால் கடந்த ஐந்தாறு வருடங்களில் தமிழர்கள் (நோர்வேயினது ஆளும்) தொழிற் கட்சி பற்றி நன்கு



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

புரிந்துள்ளதைக் காண முடிகிறது. 1989காலப் பகுதியில் தொழிற் கட்சிக்குப் (Arbeiderparti) பல தமிழர்கள் ஆதரவு வழங்கும் எண்ணத்துடன் இருந்தனர். ஆனால் கடந்த சில வருடங்களாகத் தொடர்ச்சியாக அகதிகள் தொடர்பாகக் கறாரான போக்கைக் கடைப்பிடிக்கும் தொழிற் கட்சி வெளிநாட்டவர் மத்தியிலும், தமிழர்கள் மத்தியிலும் செல்வாக்கை இழந்துள்ளது. முக்கியமாக அண்மையில் அகதிகள் தொடர்பாகக் கொண்டுவரப்பட்ட கடுமையான புதிய சட்ட மூலம் இதற்குக் காரணம். தொழிற்கட்சியால் கொண்டுவரப்பட்ட இந்தச் சட்டமூலம் பிரதான எதிர்க்கட்சிகளில் ஒன்றான வலது (Høyre), முன்னேற்றக்கட்சி (Frp) ஆகியவற்றால் ஆதரிக்கப்பட்டன. இடது [illegible], கிறிஸ்தவ மக்கள் கட்சி (Kristelig Folkeparti), சோசலிச இடதுசாரிக் கட்சி (Sosialistisk Venstre), (தீவிர இடதுசாரிகளான) சிவப்புத் தேர்தற் கூட்டு (Rød Valgallianse), மத்திய கட்சி (Senterpartiet) ஆகியன இதை முற்றுமுழுதாக எதிர்த்தன. தமிழ் அகதிகள் பலர் திருப்பி அனுப்பப்படும் அபாயத்தில் இருந்தமையால், தமிழர் பலரது கவனமும் கட்சிகளது அகதிக் கொள்கைகள் தொடர்பாக உன்னிப்பாக இருந்தன என்று கருத இடமுண்டு. பல தமிழர்களது ஆதரவை, அகதிகள் தொடர்பாகத் தளர்வான சட்டங்களைக் கோரும் ஒரு கட்சியே பெற வாய்ப்பு உண்டு. தற்போதைய சூழ்நிலையில் அத்தகு வாய்ப்பு அர்வே (RV) என அழைக்கப்படும் சிவப்புத் தேர்தற் கூட்டுக்கே உள்ளது என்பதைத் தமிழர் பலருடன் பேசுகையில் அறிய முடிந்தது.

இந்தத் தேர்தலில் ஏனைய கட்சிகளது வாக்குறுதிகளைத் தோலுரிக்கும் அர்வேயின் பிரசுரங்கள், இன,நிறவாதங்களுக்கு எதிராகத் தெளிவான போர்க்கொடி உயர்த்துகின்றன. ஒடுக்குமுறையும் வர்க்கங்களும் இல்லாத ஒரு சமுதாயத்தை உருவாக்குவோம் என்று கூறும் கட்சியின் பிரசுரங்களில் ஒன்று இனவாதம் பற்றிப் பின்வருமாறு கூறுகிறது:

"ஹிட்லரின் ஜேர்மனிக்கு நோர்வேஜிய யூதர்களைத் திருப்பி அனுப்பியது பிழை எனப் பலர் இன்று உணர்கின்றனர். ஆனால் 1930களில் பின்பற்றப்பட்ட அகதிக் கொள்கைக்கும், இன்று அகதிகளைத் திருப்பி அனுப்புவதற்கும் அதிக வேறுபாடு இல்லை. தமிழ், கென்ய அகதிகள், 1930களில் யூதர்கள் நடத்தப் பட்டது போலவே இப்போது நடத்தப் படுகின்றனர். இரண்டின் விளைவுகளும் ஒரே மாதிரியானவை. அகதிகள் பாதுகாக்கப் படுவதற்குப் பதில், யுத்தத்திற்கும் பயங்கரத்திற்கும் அவர்கள் திருப்பி அனுப்பப் படுகிறார்கள். இது அரசாலும் பாராளுமன்றாலும் நிகழ்த்தப்படும் தெளிவான வன்முறையும், இனவாதமும் ஆகும்.

அர்வே, இனவாதம் பணக்கார - ஏழை நாடுகளுக்கு இடையில் தற்போது பேணப்படும் அதிகாரத்தைப் பேணவே உதவுகிறது எனக் கருதுகிறது. ஆயிரக் கணக்கானோர் யுத்தம், பசி, இயற்கை அழிவுகளால் உயிரிழக்கையில், நோர்வே அரசு அகதிகளை இந்தச் சூழ்நிலைகளுக்குள் திருப்பி அனுப்புகிறது. நடைமுறையில் நோர்வே அரசு நாட்டின் எல்லையை (அகதிகள் வராவண்ணம்) மூடிவிட்டது. நோர்வேயைவிட வறிய நாடுகளைவிட, நோர்வே ஏற்றுக் கொள்ளும் அகதிகளின் எண்ணிக்கை குறைவு. கடந்த வருடம் 22வீதமானோருக்கே தஞ்சம் வழங்கப் பட்டது.

அரசு எல்லைகளை மூடும்போதும், மாநகரசபைகள் அகதிகளை ஏற்க மறுக்கும்போதும் வெளிவரும் செய்தி யாதெனில் அகதிகள் ஒரு பிரச்சனை என்பதே. இங்கு வரும் அகதிகள் தொகையைக் கட்டுப்படுத்த நடவடிக்கைகள் எடுக்கப் படுகையில் வெளிவரும் செய்தி யாதெனில், உலகின் அகதிகள் பிரச்சனையில் எமக்குப் பங்கில்லை என்பதே. வேலையில்லாத் திண்டாட்டம் அகதிகளுக்கு எதிரான வாதமாகப் பயன்படுத்தப் படுகையில், அந்த வாதத்தின் நோக்கம் வேலையின்மையின் உண்மைக் காரணத்தைத் திசைதிருப்பலே. இவ்வாறும், இவ்வாறான பல்வேறு வழிகளிலும் அரசு இனவாதத்தைப் பரப்புகிறது.

இனவாதம் ஒரு நச்சாக மக்களிடையே பரவி வருகையில் அரசின் அரசியல் அதை ஊக்குவிக்கிறது. மக்களது பிழையான நம்பிக்கைகளுக்கு ஊக்குவிப்பாக அரசு விளங்கி இனவாத அமைப்புகளுக்கு ஆதரவு பெருக வழிவகுக்கிறது.

அர்வே, அகதிகள் வேலைகளையும், நலன்களையும் பெறுவதில் நோர்வே மக்கள் ஒத்துழைக்க வேண்டும் என விரும்புகிறது.

அர்வே, அரசினது இனவாதத்திற்கும், ஏனைய இனவாத அமைப்புகட்கும் எதிராக மக்கள் திரளவேண்டும் எனக் கருதுகிறது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

அர்வே, சர்வதேச ஒத்துழைப்பை - தேச எல்லைகளுக்கு அப்பாலும், நிற வேறுபாடுகளுக்கு அப்பாலும் - விரும்புகிறது. நோர்வேயின் இனவாதக் கொள்கைதான் பிரச்சனையேயன்றி, அகதிகள் அல்லப் பிரச்சனை.
அர்வே, நோர்வே அதிக அகதிகளை ஏற்றுக் கொள்ள வேண்டும் என வலியுறுத்துவடன், எல்லா மாநகரசபைகளும் அதிக அகதிகளை ஏற்பது தொடர்பாகத் திட்டங்களை வகுக்க வேண்டும் என வலியுறுத்துகிறது.
அர்வே, போர் மற்றும் அவலச் சூழல்களுக்குத் திருப்பி அனுப்பப்படக்கூடிய அபாயத்தில் உள்ள அகதிகளை ஒளித்து வைத்திருப்பதன் மூலம் அவர்களுடன் தமது ஒற்றுமையைக் காட்டுமாறும் நோர்வே மக்களைக் கேட்கிறது"
வெளிநாட்டவர்களுக்கு ஆதரவான நிலைப்பாட்டை உறுதியாக வெளிக்காட்டினால் தமது வாக்குகள் குறைந்துவிடும் என்று தமது (உண்மையான?) இனவாத முகத்தை எவ்வாறாவது வெளிக்காட்டும் கட்சிகளிடையே அர்வே, வெளிநாட்டவரைக் கவரும் ஒரு கட்சியாக இருப்பதில் ஆச்சரியமில்லை. ஆனால் துரதிர்ஷடம் என்னவெனில், அர்வே எந்த இடத்திலும் ஆட்சி அமைக்கக்கூடிய பெரும்பான்மையைப் பெறுவது கடினம் என்பதுதான்.

# திருடப்பட்ட இரவு

**முகமட் அபார்**

இரவை
திருடிக்கொண்டு வந்தான் அவன்!

அலுமினியம்,
பித்தளை,
சீமெந்து பேக்
திருடுவதைப் போல்
இரவையும் திருடிவிட்டான்.

எத்தனை உயிர்கள்தான்
அதில் அமைதியாக உறங்கியது.

சூரியன் -
நிலவு இருந்த இடத்தில் இருந்துகொண்டு
அடுத்த கடமைக்காக,
ஆயத்தம் செய்தது.

உலக பொய்யர்களும்,
ஊத்தை வாயர்களும்
அந்த இரவுக்குள்
அடைபட்டுக் கிடந்தார்கள்.

ஒரு தாயின் வயிற்றில்
நாளையை காண
ஒரு குழந்தை துடித்த விதம்
பார்ப்பதற்கு மிக, மிக
அழகாக இருந்தது.

மரமும், செடியும், கொடியும்
காற்றாக எழுந்து, எழுந்து வீசியது.

இரவு,
கறுப்பாக இருந்தாலும்
அதன் அழகு ரசிக்கத்தக்கது.

எல்லாவற்றையும் விட
அந்த இரவுக்குள்ளிருந்து கொண்டு
ஒரு புதுமணத் தம்பதிகள்
முதலிரவை கழித்த விதம்தான்
பார்ப்பதற்கு அழகிலும் அழகு!

இனிவரும் இரவே
கவனமாய் இரு!
உன்னையும் திருடிவர
மனிதன் கற்றுவிட்டான்.

191194



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

தாமரைச் செல்வி பதிப்பகம்
31 48, இராணி அண்ணா நகர், கே.கே.நகர்,
சென்னை - 78 தமிழ் நாடு.




# இவர்கள் வாழ்ந்தது
## (கவிதைகள்)

### த.பழமலைய்

**காற்றுக்கும், அது சொல்லி
மரங்களுக்கும்
என் பெயர் தெரியும்.**

பூவரசுநிரை நெளியும் என் கிராமத்து
ஒழுங்கைகளில் கைவீசி நடந்தேன்.

அது வரையில், சுபமங்களாவிலோ
அல்லது கணையாழியிலோ, அவசர
அவசரமாக ஓரிரு முறை சந்தித்த
ஞாபகம்.

**இராமனுக்கு இருக்கலாம், எங்கும்
அயோத்தி
எனக்குக் குழுமூர் குழுமூரில்தான்.**

ஐரோப்பிய ராட்சத வீதிகளில் ஒரு
கருப்புப் புள்ளியாய் ஊரும் எனக்கெனச்
சொல்லப்பட்ட அழகிய மூன்று வரிகள்.

எனக்கும், நண்பர்களுக்கும் குழுமூர்
பெருமூச்சாயிற்று பின்னால்.
அந்தக் குழுமுர் மனிதனைத்
தேடலானோம்.

"எழுதுபவன் கைது
செய்யப்படவேண்டும்;
அப்பொழுதுதான் அவன்
எழுதிக்கொண்டிருக்கிறான் என்று
அர்த்தம்" என்று சொல்லும் இந்த
மனிதனை தமிழகத்தின் வழவழப்பான
பக்கங்களில் அடிக்கடி
காணமுடிவதில்லை.
அண்மையில் கிடைத்தது இவரது
படைப்புக்களின் தொகுதியொன்று.
"**இவர்கள் வாழ்ந்தது**" அதன் பெயர்.

வாழ்க்கையிலிருந்து எடுத்து கவிதை
செய்யாது வாழ்க்கையையே
கவிதையாக்கும் சகோதரன்
த.பழமலய்யின் கவிதைகள் எனக்குள்
ஏற்படுத்திய அனுபவம்
வித்தியாசமானது. இது போன்ற
நெருக்கம் எனக்கும் கவிதைக்கும்
முன்னெப்பொழுதும் ஏற்பட்டதில்லை.

**சுள்ளி பொறுக்கி
அலகு தேய்ந்திருக்கும்,
கழுத்துச் சுளுக்காமல் கட்டி இருக்க
முடியாது.
அடை காப்பது, கக்கித் தருவது,
பிறகு,
உறவு மறந்து பிரிந்து வாழ்வது-
வரலாறு இதில் அடியோட்டம் ஏது?**

குருவியிலிருந்து, மனிதர்கள்வரை,
இந்த அம்மாக்கள் ஒரே மாதிரித்தான்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

**அம்மா சொல்வது நிசமாக இருக்கும்:**
**"பண்ணவேணாம், தரவேணாம்**
**நீங்க நல்லா இருந்தா போதும்."**

தன்நலம் தெரியாத தாய்மையையும், வளர்ந்ததும் வருடத்துக்கொரு தடவை, பொங்கல் நாளில் கோ ஆப் டெக்ஸ் துணியோடு போய்ப்பார்த்து மறந்துபோகும் பொன்குஞ்சுகளையும் பாடுகிறது "கூடு" என்கின்ற கவிதை. உறவின் நியதியே அதுதான்; என்றாலும் அந்த நியதியில் இருக்கும் நிரந்தரச் சோகம் நெஞ்சைக் கீறுவது. "இப்ப சரியான சண்டை நடக்குதப்பன், இப்ப வரவேணாம். அடுத்த மாதம் மட்டில சமாதானம் வருமெண்டு கதைக்கினம். அப்ப வா" என்று யுத்தகளத்திலிருந்து தூதுவிடும் எங்கள் தாய்க் குருவிகள்! கொழும்புக் ஹோட்டல்களில் அவசர அவசரமாக விடைபெறும் எங்கள் பொன்குஞ்சுகள்!

**வரலாறு இதில் அடியோட்டம் ஏது?**

பெற்றோரை, உற்றாரை, தெரிந்தவர்களைப் பிரிந்து அந்நிய தேசத்தில் முகமிழந்து யாரோ ஒருவனாய் வாழ்வது எத்துணை கொடுமை?

**என்ன மாதிரியான இழப்பு இது–**
**பால் கொடுத்தவள் தாகத்திற்கு,**
**அருகிலிருந்து நீர் கொடுக்காமல்**
**அப்பாவின் மண்வெட்டியை**
**நான் பிடுங்கி அன்னை கழிக்காமல்**
**தங்கையைத் தம்பியை,**
**எனக்குத் தெரிந்தவர்களை, என்னைத்**
**தெரிந்தவர்களை,**
**விரும்பாமல், வெறுக்காமல்**
**எங்கோ தொலைவில், யாரோ ஒருவனாய்,**
**ஏதோ வாழ்க்கை வாழ்ந்துகொண்டிருப்பது!**
**(குருவி பாடியது)**

புலப்பெயர்வின் சோகம் இது. குழுமூரைப் பிரிந்து, சென்னையில் வாழ்வதும், ஈழத்தைப் பிரிந்து, ஐரோப்பாவில் வாழ்வதும் ஏற்படுத்தும் இழப்புக்கள் ஒன்றுதானே!

வாழ்வு கிராமங்களில்தான். நகரத்துக் கட்டிடங்களுக்குள்ளும் வாகன இரைச்சல்களுக்குள்ளும் இது காணாமல் போய்விடுகிறது. வயல், குருவி, மரம், ஆறு, ஒப்பனையில்லாத உறவுகள் என்று கிராமத்துக் காத்தைச் சுவாசித்த ஒருவனக்கு நகரம் ஒரு நரகம். இத்தொகுப்பின் பல கவிதைகளுக்கு கிராமத்தைப் பிரிந்த ஏக்கமிருக்கிறது. பல கவிதைகள் கிராமத்துள் எங்களை அழைத்துச் செல்கின்றன. தமிழகத்தில் (தமிழகத்துடன் ஒப்பிடமுடியாவிட்டாலும், ஓரளவு தமிழீழத்திலும்) காணப்படும் சாதியமைப்பு, குறிப்பாக கிராமங்களில், நிகழ்த்தும் மானுட நிந்திப்பைச் சொல்லி பல கவிதைகள் சோகப்படுகின்றன; ஆத்திரப் படுகின்றன; நையாண்டி செய்கின்றன.

**வேறு காரணங்களாலும்**
**அப்பாவும் நானும் அன்று**
**காரைப்பாடியிலிருந்து வந்துகொண்டிருந்தோம்.**

நகரத்திலிருந்து வரும் மகன் தற்செயலாக அதே பேருந்தில் வந்த தன் தந்தையுடன் கிராமத்தை நோக்கி நடக்கிறான். கிராமத்தின் எல்லைக்கு வந்ததும் இது நிகழ்கிறது:

—

**முன்னால் நடந்து கொண்டிருந்தவன்**
**திரும்பிப் பார்த்தேன்**
**மூத்திரம் விட ஒதுங்கியவர்**
**சட்டையைக் கழற்றிக் கொண்டிருந்தார்.**
**கைப்பையில் திணித்தார்**
இது போதும் உயர்சாதிக்காரர்களின் அக்கிரமத்தைச் சொல்வதற்கு. பழமலைய் சொல்வது உண்மைதான்.

........

**வரலாறு அதிர்ச்சிகள் தருவது.**
**(கீழக்கரைத் தங்கவேலு)**

www.tamilarangam.net

**"ரெட்டி ஊர்லதான் இருக்கான்**
**பத்து இருவதுக்கு ஆசப்பட்டா**
**நாம போயிக் கால்ல வுழனும்.**
**நம்ம வூட்டுக்கெல்லாம்**
**அவுங்க வரமாட்டாங்க."**

புறக்கணிப்பு ஏற்படுத்திய புண்கள் தரும் வேதனைகள், அனுபவங்களாக, பாடங்களாக பின்னால் இவ்வாறு பதிலடி கொடுக்கின்றன.

**"பொண்ணு மாப்ள அங்க போவேணாம்**
**எங்களுக்குத்தான் இல்லாமல் போச்சி.**
**புள்ளங்களாவது மானத்தோட இருங்க."**
**(தன்மானம்)**

இந்தவித தாக்கத்தைக் கொண்ட கவிதைகளில் சினிமா ஆசை என்கின்ற கவிதை குறிப்பிட்டாக வேண்டியதொரு நீள்கவிதை. இதுவும், கடன் என்கின்ற இன்னொரு கவிதையும் ஏழைகளை ஏமாற்றிச் சுரண்டும் ரெட்டியார்களை தலைகுனிய வைப்பன.

**சிவன் பெருமாள் எல்லாம்**
**தாங்கள் மட்டும் படித்தால் போதுமென்று**
**எங்கள் படிப்பைக் கவனிக்கவில்லை.**
**(மாதாகோயில் பள்ளிக்கூடம்)**

**போயும் போயும்**
**ரெட்டி கிட்டயா யோசனை கேட்ட**
**மேல படிடா.**
**நெலத்த வித்து படிக்க வக்கிறன்.**
**(யோசனைகள் கேட்பது)**

**முதியோர் கற்கட்டும், கற்காமல் போகட்டும்.**
**இடுப்புக் குழந்தையாவது**
**எங்களிடம் வந்தாக வேணும்.**
**(எத்தனைக் காலம்?)**

சாதியமைப்பின் கீழ்மட்டத்தில் வைக்கப்பட்டவர்களுக்கு மறுக்கப்படும் கல்வியையும், அதைப் பெறுவதற்கு அவர்கள் செய்யும் போரைப் பற்றியும் இக்கவிதைகள் கோபத்துடன் சொல்கின்றன.

இவரின் அரசியற் கவிதைகள் கூர்வாளின் பிரகாசத்தைக் கொண்டன.

**"பறையன்.**
**பறையனாக இருந்தா கொளுத்துவானுங்க.**
**வேறுக்கும்**
**வீரனாயிருந்தா கும்புடுவானுங்க"**
**(பறவீரன்)**

என்று வாளுருவும் இவர், மொழியுணர்வு பற்றி இவ்வாறு முழங்குகிறார்:

**நெருக்கடிகளில்,**
**நிலம் மொழி பேசும்.**
**நீர் மொழி பேசும்**
**உரத்த குரல்களில் பேசும்.**

ஒடுக்கப்படும் தமிழர்களின் போராட்டத்தைப் பற்றிக் கூறுகையில்:

**ஈழத்திலோ, கருநாடகத்திலோ விழும் இடிகளுக்கு**
**இதயம் உள்ளவர்கள் துடிக்கிறார்கள்.**
**மூளை உள்ளவர்கள் தீர்வு சொல்கிறார்கள்.**
**இவற்றோடு**
**உயிரும் உள்ளவர்கள் போராடுகிறார்கள்**
**(நிலம் மொழி பேசும்**
**நீர் மொழி பேசும்)**

"அரசியற் செயற்பாடுகளின் ஒரு பகுதியாக கவிதையும், கவிதையின் ஒருபகுதியாக அரசியலும்" என்று வாழும் த.பழமலைய் ஈழத்தமிழர்பால் கொண்ட நேசத்துக்காய் இந்திய அரசினால் அடிக்கடி தண்டிக்கப்பட்டவர். ஒலிபெருக்கி முன்னால் ஓங்கிமுழங்கிவிட்டு நெருக்கடி நேரத்தில் ஓடிஒளிகின்ற அரசியல்வாதிகள் மலிந்த தமிழகத்தில் த.பழமலைய் என்கின்ற கவிஞனின் அஞ்சா நெஞ்ச அரசியல் இவ்வாறு சோரம் போனவர்கள் முகத்தில் காறி உமிழ்ந்தது:

www.tamilarangam.net

**அமைதிகாக்கப் போனவர்கள்,நகங்களைப்**
**பிடிங்கிக் குவிக்கையில்,**
**அமைதி இழந்தேன்.**
**கற்பழித்தார்கள்.**
**காறித் துப்பினேன்.**
**சக்கரங்கள் முன் எறிந்தார்கள்;**
**ஈரல் குலை, நசுங்கி துடியாய் துடித்தது.**
(இரத்தமும் செத்தது!)
கறுப்புக் கொடி என்கிற இன்னொரு கவிதையும் ஈழத்தமிழர் போராட்டத்தை ஆதரிப்பவர்கள் இந்தியாவில் படுகின்ற துன்பங்களைச் சொல்வது.

இறுதிக் கவிதை மனிதனாய் இருப்பது. வசதிகளுக்காகவும், சந்தோசங்களுக்காகவும் வரித்த கொள்கைகளை விட்டுவிடாத ஒரு மனிதனின் குரல்.

**"ஓங்க கொள்க ஓங்களோட**
**இவுங்க எதிர்காலத்தை கெடுத்திடாதீங்க.**
**இந்தப் பெயர் வேணாம், மாத்தில்லாம்.**
**நீயே மாத்திக்கலாம் லெனின்."**

என்று சொல்லிய நண்பரின் கருத்துக்குப் பதிலாக இந்தக் கவிஞன் முணுமுணுப்பது இவ்வாறு:

**இது,**
**மனிதனாக இருப்பதைப் பற்றிய கேள்வியும்.**
**இதற்கு,**
**மக்கள் கந்தை உடுத்தட்டும்!**
**மகனுக்கு,**
**அரசு வேலை கிடைக்காமல் போகட்டும்!**

கவிஞர் பழமலைய் குறியீடுகள், படிமங்களின்றி தட்டையான மொழியில் அனுபவங்களை, சிறு கதைத் தன்மையுடன் பதிவு செய்வதாக குறை கூறுவோருளர். நல்லது! வெறும் கவிதை படிக்க விரும்புவோர் வேண்டுமானால் படிமங்களையும், குறியீடுகளையும் தேடிப் போகட்டும். வாழ்க்கையைப் படிக்க விரும்புவர்கள் பழமலையைப் படிப்பார்கள்.

**கண்ணன்.**

அரேபிய ஹைகூ:

## இலையுதிர் காலம்

வாசலில் காத்திருந்து
ஒரு மரணம்
அவநம்பிக்கையான எச்சரிக்கை

## மன சாட்சி

தலையுயர்த்தி நிற்கிறது
பாலைவன புதர்ச்செடி
இன்னும் கவனிக்கப்படாமல்
வளர்க்கப்படாமல்

## தேர்வுகள்

நிச்சயமற்ற ஒன்றா?
இலாபமடையும் முயற்சிகளா? அல்லது
குறைபாடுகளின் கனவுகோலா?

## கற்பனை

எதிர் பார்ப்பின்
எல்லை உடைந்து வெளியேறும்
விருப்பத்தின் கோடு

## மாரிக்காலம்

வாழ்க்கைச் சாலையில் இழந்த
மீடக முடியாத
பருவ காலத்தின் துன்பங்கள்

-பிர்தெனல் சபீத் ஹீசேன்
-தமிழில் அ.ஜ.கான்

www.tamilarangam.net

# அயல் உல்லாசப் பிரயாணிகட்கான வரவேற்பு விளம்பரம்

சிவசேகரம்

வருக நல் விருந்தினரே வருக.
நும் வரவு நலன் மிகவென
இந் நாடு
தன் விமான நிலையத்தில்
நுமது பாதங்கள் நோவாமற்
கம்பளம் விரிக்கிறது,
கை கூப்பி வரவேற்கிறது.
வெல்கம், ஆயுபோவன், வணக்கம்.
நும் கழுத்தில் மாலைகளைச் சூட்டி
மகிழ்வித்துச், சொகுசான
வாகனத்திலேற்றி
நும்மை இந் நாடு
தன் குளிரூட்டப்பட்ட ஹொட்டல்கட்குக்
கொண்டு செல்கிறது.
நீவிர் மனங்கனிந்து சிந்துகிற சில்லரைக்காய்
பல்லிளிக்கும் இந்நாடு
நும் பெட்டிகளைச் சுமக்கிறது,
நீச்சற் குளத்தருகே நீளத்துவாய்களுடன்
நுமக்காகக் காவலிருக்கிறது.
இந் நாடு
தன் கடலோர மணற் பரப்புகளிற்
தன் பிள்ளைகளின் கால்படாது மறித்து
நுமக்காக ஒதுக்குகிறது.
நுமக்கு விஸ்கியும் கோக்கும் அலுத்தால்
மரமேறிச் செவ்விள நீர் பிடுங்குகிறது.
நுமக்குக் களிப்பூட்டத்
தன் மாலைப்பொழுதுகளில்
ஒப்பனை செய்து வேடம் பூண்டு
கூத்துகள் ஆடுகிறது,
நும் படுக்கையறைகளில்
அம்மணமாய்க் காத்திருக்கிறது.
அவசியமானால் இந்நாடு
தன் பிள்ளைகளையும் தருவதற்குச்

சித்தமாய் இருக்கிறது.
இவ்விடுமுறை கழிந்து நீவிர்
சென்றாலும் விருந்தினரே,
இன்னொருகால் வருக.
நும்மிடம் இந்நாட்டை அடகுவைத்த
எசமானரின் எசமானர்காள்,
இந்நாட்டின் அறிதுயில் கலையுவரை,
வருக.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# முறைமாறும் நீதி

இ.தியாகலிங்கம்

சங்கவன் என் வீட்டிற்கு வந்திருந்தான். நான் குளிக்கப் போவதற்குத் தயாராகத் துவாயைக் கையில் வைத்திருந்தேன். அவனைக் கண்டவுடன் என்ன விடயம் என்பதைக் கேட்டு ஆளை அனுப்பிய பிறகு குளிக்கலாம் என உத்தேசித்தேன். துவாயை மேசையில் போட்டுவிட்டு அவன் என்ன சொல்லப்போகிறான் எனக் காத்திருந்தேன். நாங்கள் எல்லோரும் நோர்வேக்கு அகதியாய் வந்தவர்கள். சங்கவன் பல்கலைக்கழகத்தில் பயின்றவன். கொழும்பில் ஒரு நிறுவனத்தில் உயர்பதவியில் இருந்தவன். நான் அப்படியல்ல. பத்தாம் வகுப்போடு நாடு காக்கச் சென்றவன். இங்கு இருவரும் தமிழர் கூட்டமைப்பு நிர்வாகத்தில் இருக்கிறோம்.

நகரசபையில் தமிழ் ஆசிரியராக வேலை ஒன்று வந்திருந்தது. அதற்கு இவர்கள்எல்லோரும் விண்ணப்பித்திருக்க வேண்டும். சங்கவனும் நிச்சயம் விண்ணப்பித்திருப்பான். நான் அதைப்பற்றி அவனிடம் கேள்க்கவில்லை. அது அவனுடைய தனிப்பட்ட விடயம் என்பது எனது



www.tamilarangam.net

கருத்து.

"சிலோனிலை பிரச்சனை இல்லாட்டி உங்களுக்கு நல்ல வேலையும் சம்பளமும் நிம்மதியா இருந்திருக்கலாம் என்ன?"

"ம்... எல்லாம் அநியாயமாப் போச்சுது. படிச்ச படிப்பென்ன இஞ்ச வந்து நாங்களும் வெட்டவேண்டி இருக்குது"

"என்ன செய்யிறது. இவங்களுக்கு எங்கடை படிப்பின்ரை மரியாதை தெரியிறேல்லை. அது சரி என்ன விசயமா வந்தனீங்கள்?"

"நாளைக்குப் பின்னேரம் ஐஞ்சு மணிக்கு நிர்வாகசபைக் கூட்டம் இருக்கு. நீங்களும் வாங்கோ, ரெலிபோன் பண்ணுவம் எண்டு நினைச்சனான். கடைக்கு வந்ததாலை நேரேயே வந்து சொல்லீட்டுப் போகலாம் எண்டு வந்தனான்"

"அதுக்கென்ன வந்தாப் போச்சுது. விநோ, ஏதாவது கொண்டா" நான் மனைவியைக் கூப்பிட்டேன்.

"கொண்டாறன், கொண்டாறன்" அவள் பதிலளித்தாள். தொடர்ந்தும் கதைத்துக் கொண்டிருக்கிறது மரியாதை இல்லை என்பதற்காய், "என்ன விசயம் கதைக்கிறதா உத்தேசம்?"

"அந்த வேலைக்கு சோக்க (விண்ணப்பித்தல்) பண்ணினம் எல்லே. அதுக்கு வெளியிலை இருந்தெல்லாம் சோக்க பண்ணியிருக்காம்"

"ஆங் அதைப் பற்றி என்ன கதைக்கிறது?"

"இல்லை வெளியிலை இருந்து ஒரு ஆள் வாறதிலையும் இங்க இருக்கிற ஒரு ஆளுக்குக் கிடைச்சா நல்லதெல்ல"

"ம்.. நல்லதுதான். ஏன் நீங்கள் பயப்பிடுறியள் வெளியிலை இருந்து வருவினம் எண்டு"

"இல்ல நல்ல றிசேல்ட் உள்ளவ எல்லாம் வெளியிலஇருந் சோக்க பண்ணி இருக்கினம் எண்டு கேள்வி. தமிழர் கூட்டமைப்புக் கொமீனைக் (மாநகரசபை) கேட்டா அவங்கள் இங்க இருக்கிறவையாப் பாத்து வேலை கொடுக்கலாம் எல்லே"

"ஆனா... ஏன் சிலோனிலை தமிழருக்கும் சிங்களவருக்கும் பிரச்சனை தொடங்கினது உங்களுக்குத் தெரியுமே?"

"இது தெரியாமல் இருக்குமே என்ன... தரப்படுத்தல்தானே பெரிய பிரச்சனை. முதல்ல ஸ்ருடன்சுக்குத்தானே பிரச்சனை வந்தது"

"உங்களுக்கு விளங்குது. இங்கையும் தரப்படுத்தல் இருக்கக்கூடாது. சலுகைகள் இருக்கக்கூடாது. சலுகைகளைச் சொல்லி மற்றவேன்ரை திறமையான உழைப்பை களவாடி மட்டம் தட்டி முன்னுக்கு வரக்கூடாது. திறமைக்குத்தான் முதலிடம் இருக்கவேணும். இது உங்களுக்குக் கட்டாயம் விளங்கும். இதுக்கெல்லாம் கூட்டமும், சிபாரிசும் தேவையில்லை, போய் உங்கட திறமையை வளர்க்கிறதைப் பாருங்க" கூறிவிட்டு நான் சங்கவன் கோவித்தாலும் பறுவாய் இல்லை என்கிற எண்ணத்தோடு குளிக்கப் போய்விட்டேன்.

சங்கவன் விறைத்துப்போய் இருந்தான். ●

## (சுய) விமர்சனம்

விழா முடிய
படைப்பாளி நான்
மேடைவிட்டிறங்கி கலந்தேன்
கூட்டத்துள்.

தோள் தொட்டு
"அருமை" யென்றார்கள்.
சிலர்
"கலக்கிவிட்டீர்" என்று
கைகுலுக்கினார்கள்.

அரங்க வாசலில்
மழைக்கொதுங்க,
அருகில் நின்ற மூர்த்தி மட்டும்
"ஈர்க்கவில்லை" என்றான்
புகைவிட்டபடி.

"பாராட்டல்ல; படைப்புபற்றி
விமர்சனமே தேவை" யென்றேன்.

எனினும்
"இவனுக்குப் பொறாமை"
என்றது மனசு
என்னையும் மீறி.

-சிப்பி



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

**•சஞ்சயன்**

# மாகாண, மாநகர சபைத் தேர்தல்களும் இங்கு வாழும் வெளிநாட்டவர்களும்.



நான்கு வருடங்களிற்கு ஒரு முறை இடம் பெறும் மாகாண, மாநகர (Fylke, Kommun) சபைகளிற்கான தேர்தல்கள் ஐப்பசி மாதம் பதினோராம் (11) திகதி இடம் பெறவுள்ளது. நோர்வேயின் அரசியல் யாப்பின் பிரகாரம் (Grunlov 1814) மாகாண - மாநகர சபைகள் ஒரு சில சமஷடி நாடுகளிலுள்ள மாநில அரசுகளைவிட அதிகமான அதிகாரங்களைக் கொண்டுள்ளன. இவற்றிற்கான சகல வழிமுறைகளும் அரசியல் யாப்பு ரீதியாகவே வரையறுக்கப்பட்டு உள்ளமையால் அதிகாரப் பரவலாக்கல் சிக்கலின்றி நடைமுறைப்படுத்தப்படுகின்றன.

மாகாண அல்லது மாநகர சபைகளிற்கான தேர்தலில் நோர்வேயின் எந்த மாகாணத்திலும் குறைந்த பட்சம் நான்கு வருடங்கள் தொடர்ச்சியாக வசித்த எந்த ஒரு வெளிநாட்டவரும் இத் தேர்தலில் வாக்களிக்க இயலும். கடந்த தேர்தல்களை விட இந்த முறை வெளிநாட்டு வாக்காளர்கள் நாடு முழுவதும் பரந்த அளவிலும் தலைநகரான Oslo வில் கணிசமாகவும் இருப்பதால் வெளிநாட்டவர்கள் மத்தியில் இத்தேர்தல் முக்கியத்துவம் பெற்றுள்ளது. வழமையைவிட வெளிநாட்டவர்கள் பலர் இத் தேர்தலில் போட்டியிடுகின்றனர். பெரும்பாலான அரசியல் கட்சிகள் வெளிநாட்டவர்களின் வாக்குகளை கருத்திற் கொண்டு ஒரு சில பெரிய நகரங்கள் - மாகாணங்களில் வெளிநாட்டவர்களையும் தமது வேட்பாளர்களாக நிறுத்தியுள்ளது. அதே சமயம் முன்னர் RV (தீவிர இடது சாரிப் போக்கைக் கொண்ட கட்சி) கட்சியில் இருந்து பிரிந்து வந்த பாக்கிஸ்தானியரான **ஆதர் அலி** என்பவர் வெளிநாட்டவர்களை மட்டுமே தனித்து உள்ளடக்கிய வேட்பாளர் பட்டியலை தாக்கல் செய்ய உள்ளதாக அறிவித்துள்ளார்.

தேர்தல்களிற்கான பிரச்சாரங்கள் எதுவுமே பலமாக இடம் பெறாவிட்டாலும் வெளிநாட்டவர்களுக்குஎதிரான இனக்குரோத பிரச்சாரங்கள் பெருமளவில் இடம் பெற்று வருகின்றன. அனுபவம் வாய்ந்த பல பத்திரிகையாளர்களின் கணிப்பீட்டின்படி, வெளிநாட்டவர்களிற்கு எதிரான இனவாத/ நிறவாதப் பிரச்சாரங்கள் முடுக்கிவிடப்பட்ட



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

1987தேர்தலை விடத் தற்போது நடைபெறவுள்ள தேர்தலில் மோசமான இன-நிற வெறிப் பிரச்சாரங்கள் மேற்கொள்ளப்படுமென அறிவித்துள்ளார். ஆளும் தொழிற் கட்சியும் (AP) வலதுசாரி எதிர்க்கட்சியும் ( Høyre ) வெளிநாட்டவர்கள் தொடர்பாக மிதமான கோட்பாடுகளையே கடைப்பிடிப்பதாகக் கூறிக் கொண்டாலும் நடை முறையில் வெளிநாட்டவர்கள் தொடர்பாக ( குறிப்பாக அகதிகளாகக் குடியேறுவோர் ) கடுமையான போக்கினையே கடைப்பிடிக்கின்றன. ஆளும் கட்சியின் பிரதான வேட்பாளரும் தற்போதய Oslo மாநகர முதல்வருமான Rune Gerhadsen "வெளிநாட்டவர் மீதான அச்சம் ( fremmed frykt) பற்றிக் கருத்துத் தெரிவிக்கையில் இவர்களனைவரையும் இனவாதிகள் என முத்திரை குத்தக் கூடாது எனக் கூறிய முதல்வர் Rune ஆளும் கட்சி ஆதரவாளர்கள் மத்தியில் துரித கதியில் அதிகரித்து வரும் வெளிநாட்டவர் மீதான வெறுப்பை நிவர்த்தி செய்யத் தீர்வுகள் எதனையும் முன்வைக்கவில்லை. Oslo மாநகர/மாகாண சபைக் குட்பட்ட பிரதேசங்களிலேயே வெளிநாட்டவர் அதிகளவில் வேலைவாய்ப்பின்றி உள்ளனர். இங்கு வாழும் வெளிநாட்டவர்கள் சாதாரண நோர்வீஜிய மக்களுடன் ஒப்பிடுகையில் சமூகப் பொருளாதார ரீதியாகத் தொடர்ந்தும் பின் தங்கிய நிலையிலேயே உள்ளனர். இவை பற்றி எதையுமே அக்கரை செலுத்தத் தவறிய ஆளும் தொழிற் கட்சி இனவாதத்திற்கு எதிராகக் கூக்குரல் இடுவதில் பயனில்லை.

அண்மையில் வலது சாரிக் கட்சியின் பிரதான வேட்பாளர் ஒருவர் தனது இனவாதத்தைப் பகிரங்கமாகவே கக்கியுள்ளனர். வெளிநாட்டவர்கள் பலரும் ஒரே இடத்தில் வீடுகளை வாங்குவதால் நோர்வேஜியர்கள் பலர் அவ்விடங்களில் வீடுகளை வாங்க விரும்புவதில்லை எனவும் இதனால் வீட்டுடமையாளரான பல நோர்வேஜியர்களின் வீட்டின் பெறுமதி கூடுவதில்லை எனவும் இதனால் அவர்கள் பெருமளவிலான இழப்பீடுகளை அனுபவிப்பதாகவும் கூறியுள்ளார். இந்நிலையை நிவர்த்தி செய்ய வீடுகளை விற்பது தொடர்பாக இறுதி முடிவெடுக்கும் அதிகாரம் குறித்த பிரதேசங்களிலுள்ள வீட்டுரிமைக் குழு( Borettslag) வினருக்கே இருக்க வேண்டுமெனக் கூறியுள்ளார். இதைவிட வெளிநாட்டவர்களுக்கு வீட்டுரிமைக் குழு வீடுகளை விற்கக் கூடாது எனச் சட்டம் இயற்றி இருந்தால் நன்றாக இருந்திருக்கும். இவ்வேட்பாளரின் பேச்சை நிராகரிக்கும் விதமாக வலதுசாரிக் கட்சியின் Oslo தலைமை வேட்பாளா மைக்கல் தெற்சேனர் ' * கருத்துக் கூறியுள்ள போதிலும் கட்சியின் நிர்வாகப் பீடம் இது தொடர்பாகத் தெளிவான விளக்கம் எதனையும் வழங்கவில்லை.

பிரதான எதிர்க்கட்சியான மத்திய கட்சி, (SP) சோசலிச இடதுசாரிக் கட்சி (SV) கிறிஸ்த்தவ மக்கள் கட்சி ( Krf) என்பன வெளிநாட்டவர்கள்

## வர்க்கப்போர்

*ரூபன்*

நோர்வேயில் நிறவாதத்திற்கு எதிராக உறுதியாகக் குரல் கொடுத்துவரும் பத்திரிகை 'வர்க்கப்போர் ( Klassekampen - /க்ள்ஸ்ஸகாம்பன்) இது ஒரு இடதுசாரிப் பத்திரிகையாகும். வியாபாரப் பத்திரிகைகளில் தொடர்ச்சியாக நிறவாதத்தை எதிர்த்தும், புதிய நாஸிகள் பற்றிய தகவல்களைத் தொடர்ந்து வெளியிட்டும் வருவது தினசரியான 'டாக்பிளாத ( Dagbladet ) ஆகும்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

**வேட்பாளர் ஒருவர் தனது இனவாதத்தைப் பகிரங்கமாகவே கக்கியுள்ளனர். வெளிநாட்டவர்கள் பலரும் ஒரே இடத்தில் வீடுகளை வாங்குவதால் நோர்வேஜியர்கள் பலர் அவ்விடங்களில் வீடுகளை வாங்க விரும்புவதில்லை எனவும் இதனால் வீட்டுடமையாளரான பல நோர்வேஜியர்களின் வீட்டின் பெறுமதி கூடுவதில்லை எனவும் இதனால் அவர்கள் பெருமளவிலான இழப்பீடுகளை அனுபவிப்பதாகவும் கூறியுள்ளா**

தொடர்பாக மிதமான கொள்கையைக் கடைப்பிடிக்கின்ற அதேசமயம் இவ்விடயத்தில் ஐ.நா.வின் அகதிகள், குடிபெயர்தல் தொடர்பான கோட்பாடுகளையே கடைப்பிடிக்க வேண்டுமெனக் கோருகின்றன. பல நாடுகளில் ஐ.நா. இயங்க முடியாதவாறு தடைகளும் வேறுசில நாடுகளில் ஐ.நா. பூரண தகவல்களைப் பெறாமல் ஒருபக்கச் சார்பாகச் செயலாற்றுவதும் இன்னும் சில நாடுகளில் ஐ.நா. முரணான, உண்மைக்கு மாறான தகவல்களை வழங்குவதாலும் அகதிகள் மற்றும் குடியேற்றம் தொடர்பாக ஐ.நா.வின் கோட்பாடுகள் கேள்விக்குறியாகவே உள்ளன. மேற்கூறிய கட்சிகள் யாவும் இனவாதத்திற்கு எதிராகவும் நிறவாதத்திற்கு எதிராகவும் குரல் கொடுக்கின்ற போதும் பாராளுமன்றத்தில் இக்கட்சிகளால் ஆதிக்கம் செலுத்த முடியாத நிலையே நிலவுகின்றது.

பழமைவாத இடது கட்சியும் ( Venstre) தீவிர இடதுசாரிக் கட்சியும் ( RV ) வெளிநாட்டவர் குறிப்பாக அகதிகள் குடியேறுவோர் தொடர்பாக மிகவும் சாதகமாகவே செயல்படுகின்றன. Venstre கட்சியின் தலைவர் Einar Dorum என்பவரே நோர்வீஜியர் வெளிநாட்டவர் இணைப்புத் தொடர்பு அதிகாரியாகவும் செயல்படுகின்றார். அக்கட்சி அங்கத்தவர்கள் பலர் இனவாத நிறவாத எதிர்ப்பு மையத்தில் இணைந்து பங்காற்றி வருகின்றனர். இவ்விரு கட்சிகளின் அடிப்படைச் சமூகப் பொருளாதாரக் கொள்கைகளில் முரண்பட்ட கொள்கைகளைக் கொண்டுள்ள போதும் வெளிநாட்டவர்கள் விடயத்தில் மிகுந்த அனுதாபத்துடனேயே இயங்கி வருகின்றன.

அதிதீவிர இனவாதக் கட்சியும் முதலாளித்துவக் கொள்கைகளைக்

கொண்டதுமான முன்னேற்ற முற்போக்குக் (?) கட்சி ( Frp ) 1987களிற்குப் பின்பு மீண்டும் தனது இனவாத நிறவாத பிரச்சாரத்தை முடக்கி விட்டுள்ளன. கட்சியின் இந் நடவடிக்கையை அடுத்து கட்சியின் பல சிரேஷட அங்கத்தவர்கள் கட்சியைவிட்டு விலகிவிட்டனர். இனவாதத்தைத் தூக்கிப் பிடிப்பதன் மூலம் சரிந்து வரும் கட்சியின் செல்வாக்கைத் தூக்கி நிறுத்த முயன்று இதில் ஓரளவு வெற்றியும் பெற்றுள்ளது. வெளிநாட்டவர்களின் பிரச்சனையை வெறும் முதலைக் கண்ணீர் என வர்ணிக்கும் இக் கட்சியின் தலைவர் Carl i Hagen சிறந்த பேச்சாற்றல் திறமையுடையவர். வெளிநாட்டவர் மீது மட்டுமன்றி அரசின் சமூகக் கொடுப்பனவுகள் மீது கடுமையாக விமர்சனத்தை முன் வைக்கும் இக்கட்சியினர் சமூக செலவுகளின் மீதும் கடுமையான கட்டுப்பாட்டை விதிக்கக் கோருகின்றார்.

நோர்வே வாழ் வெளிநாட்டவர் முன்னெப்போதும் இல்லாத அளவிற்கு நெருக்கடி நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர். வேலையின்மை மிக அதிகளவில் 40%மாக உள்ளது. தொடர்ந்தும் பலா சமூக உதவிப் பணத்திலேயே தங்கி வாழ வேண்டியுள்ளது. வெளிநாட்டவர்களின் பிள்ளைகளிற்கு குழந்தைகள் இல்லம ( Barnehage) கிடைப்பது சில இடங்களில் முயல் கொம்பாக உள்ளது. இவர்களிற்கான



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

*தாய் மொழி கற்பிப்பதை பல மாகாண மாநகர சபைகள் இடை நிறுத்தியுள்ளது. பல வெளிநாட்டு மாணவர்கள் பாடசாலை பல்கலைக்கழக அனுமதி இன்றி உள்ளனர். வேலையின்றியுள்ள பல வெளிநாட்டவர்களுக்கு வேலையற்றுள்ள நோர்வீஜியர்களிற்கு வழங்குவது போல் தொழில் சார்ந்த பயிற்சி நெறிகள் ( kurs) கூடியளவு கிடைப்பதில்லை. இவையுட்பட இன்னும் பல பிரச்சனைகளை இங்கு வாழும் வெளிநாட்டவர்கள் எதிர் நோக்கியுள்ளனர்.*

*நோர்வே ஒரு பல இன-கலாச்சாரத்தைக் கொண்ட நாடு என ஆளும் கட்சியும் ஒரு சில எதிர்க் கட்சிகளும் கூக்குரலிட்ட போதும் நடைமுறையில் எதையுமே நிறைவேற்றுவதில்லை. தேர்தலில் வாக்களிக்கும் பொது மக்கள் இதைக் கவனத்திற் கொள்ளுதல் அவசியம். நாம் வாழும் மாகாண மாநகர சபைகளின் நிர்வாகத்தைத் தெரிவு செய்ய எமக்கு வழங்கப்பட்டுள்ள சந்தர்ப்பத்தை நாம் சரியாகப் பயன்படுத்திக் கொள்ளுவோம்.*

## நிறவாத எதிர்ப்பு மையம்

**சத்யன்**

1978ஆம் ஆண்டு வெவ்வேறு நாடுகளைச் சேர்ந்த சிலர் இணைந்து 'குடியேறியவர்கள் என்ற பெயரில் ஒரு பத்திரிகையை நிறுவினர்.

எழுபதுகளின் ஆரம்பத்திலேயே நோர்வேக்கு மூன்றாம் உலகைச் சேர்ந்தவர்கள் தொழில்தேடி முதன்முதலாக வந்தனர். இதனால் எழுபதின் பிற்பகுதியில் எழுந்த நிறவாதம் பற்றி பத்திரிகைகளோ, தொடர்பு சாதனங்களோ சரியான கவனம் செலுத்தவில்லை. 1975ல் வெளிநாட்டவர் வருகையைக் கட்டுப்படுத்தப் புதிய சட்டம் கொண்டுவரப் பட்டது.

இந்தச் சூழலிலேயே 'குடியேறியவர்கள் வெளிவந்தது. இதன் பின்பே நோர்வேயில் அரசியல், சமூக மட்டங்களில் வெளிநாட்டவரது பிரச்சனைகள் கருத்தில் எடுக்கப் பட்டன.

1982ல் குடிவந்தோர் வானொலி ( Radio Immigranten ) தொடங்கப் பட்டது. இது தற்போது ரெல்லுஸ் றாடியோ ( Tellus Radio ) என அழைக்கப் படுகிறது. இதில் 11 மொழிகளில் நிகழ்ச்சிகள் ஒலிபரப்பாகின்றன. தமிழ் நிகழ்ச்சிகள் 'தமிழ்நாதம் எனும் பெயரில் வியாழன் மாலைகளில் ஆறு மணி முதல் ஏழு மணிவரை பண்பலை வரிசை 101.1இல் ஒலிபரப்பாகின்றன.

1985ல் தனக்கென்று ஒரு தனியான கட்டிடத்தைப் பெற்று இயங்கத் தொடங்கிய நிறவாத எதிர்ப்பு மையம் ( Anti rasistik senteret ) நிறவாதம் பற்றிய தகவல் வெளியீடுகளையும், சட்ட உதவிகளையும் வழங்கி வருகிறது.

1985ல் எஸ்ஓஎஸ் றாஸிஸ்மெ ( SOS Rasisme ) என்ற பெயரில் நோர்வே முழுவதும் நிறவாதத்தை எதிர்த்து அந்தந்தப் பகுதிகளில் குழுக்களை உருவாக்கி நிறவாத எதிர்ப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டது. ஆனால் இன்று எஸ்ஓஎஸ் றாஸிஸ்மெ தனிக்குழுவாக இயங்கி வருகிறது.

1987முதல் 'அவசர உதவிப் பிரிவு தொடங்கியது. நிறவாதத்தால் பாதிக்கப் பட்டவர்களுக்கு இது உதனடி உதவிகளை வழங்கி வருகிறது.

நிறவாத எதிர்ப்பு மையத்தில் இருந்து இருதிங்கள் இதழான 'சமோரா ( SAmmon MOt RAsisme ) வெளிவருகிறது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

• பாலா

# தேசத்தின் குறிப்புகள்



பல்வேறு காரணங்களினால் போர் நிறுத்தம் செய்து வெளுத்துப் போயிருந்த ஈழத்தை யுத்த மேகங்கள் தீவிரமாகச் சூழ்ந்துள்ளன. ஆயுதப் போராட்டம் தொடங்கப்பட்ட காலத்தில் இருந்து பல முக்கியமான கட்டங்களில் படிமுறை வளர்ச்சிகள் ஏற்பட்டதுண்டு. இந்த வகையில் இப்போது தொடங்கப்பட்டுள்ள இந்த யுத்தமும் படிமுறை வளர்ச்சியைக் கொண்டிருக்கிறதா அல்லது பின்னடைவானதா என்ற கேள்வி எழுகிறது.

இக் கேள்விக்கான முதற்காரணி மற்றைய கட்டங்களில் இருந்த புறச் சூழலுக்கும் இப்போதைய புறச் சூழலுக்கும் நிறைய வித்தியாசம் இருப்பதேயாகும். முன்னைய யுத்தங்களில் எந்தவொரு தரப்பும் தம்மைச் சமாதான விரும்பிகளாக வெளிப்படுத்தவும் இல்லை; எதிரணியைச் சமாதானத்துக்குரியதாக நம்பவுமில்லை.

ஆனால் இம்முறை போர் நிறுத்தத்திற்கான சமாதான விரும்பிகளாக இரு தரப்புமே பறைசாற்றிக் கொண்டதும் பரஸ்பரம் ஓரளவு நம்பிக்கை வைத்ததும் நிகழ்ந்துள்ளது. அதே சமயம் சர்வதேச அரங்கமும் இலங்கை இனப் பிரச்சனையை முடிவுக்குக் கொண்டுவர முயறசிகளை மேற்கொண்டதையும் தெளிவாக வெளிப்படுத்தியமையும் நிகழ்ந்துள்ளது. இதன் அடிப்படையில் தம்மைச் சமாதான விரோதிகளாக வெளிப்படுத்துவதற்கு இரு தரப்புமே விரும்ப மாட்டார்கள்.

புலிகளால் தொடங்கி வைக்கப்பட்டுள்ள இந்த யுத்தம் தமிழ் மக்களைக் காலங் காலமாக ஏமாற்றிவரும் பேரினவாத அரசின் இழுத்தடிப்புக் கொள்கையைப் புலிகளும் நன்கு புரிந்து வைத்துள்ளனர் என்பதை வெளிப்படுத்த மட்டுமே உதவும். இதைச் சந்திரிகா அரசு மாத்திரமே உணர முடியும். ஆனால் சர்வதேச சமூகத்தின் தார்மீக உடன்பாடு இருக்குமா என்பது நம்ப முடியாத ஒன்றாகும். புலிகளது சமாதான விருப்பம் போலியானது என்ற தோற்றமே மேலோங்கச் சாத்தியங்கள் உள்ளன.

சந்திரிகா அரசும் சமாதான முயற்சிகள் முறிந்த நிலையில் தவிர்க்க முடியாத நிலையில் யுத்தத்தில் இறங்கியுள்ள தோற்றத்தை உலகுக்குக் காட்டிக்

www.tamilarangam.net

*கொண்டே தீவிர இன அழிப்பில் இறங்கியுள்ளது. இத் தவிர்க்க முடியாத நிலைக்கு மெருகூட்டவும், தன்னைத் தொடர்ந்து சமாதான விரும்பியாகக் காட்டுவதற்கும் (உள்நாட்டு, வெளிநாட்டு சக்திகளுக்கு) ஒகஸ்ற் மூன்றாம் திகதி ஓர் தீர்வுத் திட்டத்தை வைத்துள்ளது. இத் தீர்வுத் திட்டத்தின் முக்கிய அம்சமாக வடக்குக் கிழக்கு இணைப்பை ஏற்றுக் கொண்ட நிலைக்கு அரசு இறங்கியுள்ளதாகக் காட்டியுள்ளது. ஆனால் அது விடுதலைப் புலிகளுடன் நடாத்தும் யுத்தத்தின் காரணம் தவிர்த்து எடுக்கப்பட்ட முடிவு என்பது போல் விடுதலைப் புலிகளின் அங்கத்துவம் இல்லாமல் நிகழ்ந்துள்ளது. அதுவும் அரசின் முன்றேற்றப் பாய்ச்சல் நடவடிக்கை புலிகளின் புலிப் பாய்ச்சல் நடவடிக்கையால் தோற்கடிக்கப்பட்ட நிலையிலும், இராணுவச் சமநிலையில் புலிகளின் கரம் ஓங்கியுள்ள நிலையிலும் வெளியாகியுள்ள ஒருதலைப் பட்சமான இந்த அறிவிப்பானது தனது இக்கட்டான நிலையைச் சமாளிப்பதற்காகச் செய்யப்பட்டதைக் குறிக்கிறது.*

*சந்திரிகாவின் இச் சமாளிப்பு முயற்சியை, சமாதானத்தை விரும்பும் சர்வதேச சமூகமும் உள்நாட்டு சக்திகளும் எவ்வாறு ஏற்றுக் கொள்வார்கள் என்பதையும், சந்திரிகாவின் புதிய யுக்திகளுக்கு எவ்வாறு பதிலளிக்கப் போகின்றன என்பதையும் பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும்.*

## கண்டிக்கிறோம்!

பாரிஸில் இருந்து வெளிவரும் ஈழநாடு பத்திரிகை தாக்கப் பட்டதாகச் செய்திகள் வெளிவந்துள்ளன. இது உண்மையாயின் இது மிகவும் கண்டிக்கப்பட வேண்டியது.

புலம்பெயர் நாடுகளிலும் தமிழ் மக்களது கருத்துச் சுதந்திரத்தின் மீது தொடர்ச்சியாக அச்சுறுத்தல்கள் நிகழ்ந்து வந்துள்ளன. மிரட்டல்கள், தாக்குதல்கள், எரிப்பு எனப் பல நிகழ்வுகள் நிகழ்ந்துள்ளன. இதன் பின்னணியில் எந்தக் காரணம் கூறப்பட்டாலும் அது ஏற்புடையதல்ல. கருத்தைக் கருத்தால் சந்திப்பதே முறையானது. பிழையான கருத்தை ஒருவர் கொண்டிருப்பின் அதைத் தமது சரியான கருத்தால் வென்றெடுப்பதே சரி. அதைவிடுத்து, வன்முறை மூலம் ஒருவர் கொண்டிருக்கும் அல்லது வெளிப்படுத்தும் கருத்தை எதிர்ப்பது முறையற்றது. இவ்வாறான நடவடிக்கைகளில் தமிழ் மக்களுக்கு எதிராக இலங்கை அரசும் இயக்கங்களும் மேற்கொண்ட நடவடிக்கைகள் ஒன்றிரண்டல்ல. இந்த வன்முறைகள், புலம்பெயர் நாடுகளையும் பீடிக்கும் முன்பு விழித்துக் கொள்வது அவசியம்.

இந்தக் கோடை காலமும் ஒஸ்லோவை மீண்டும் தமிழர்களின் வன்முறைக் களமாக்கியுள்ளது. இந்த வன்முறைகளைச் சுவடுகள் எந்த நியாயப்படுத்தலுக்கும் அப்பாற்பட்டுக் கண்டிக்கிறது.

தஞ்சம் புகுந்த இடத்தில் வன்முறைகளில் ஈடுபடுவது, அகதிகள் என்ற முறையில் எமக்கும், விடுதலையை வேண்டி நிற்கும் தமிழீழ மக்களுக்கும் களங்கம் தருவது. தவிரவும் எமது பிரச்சனைகளை நாகரிகமான முறையில் தீர்க்கத் தெரியாத ஒரு இனம் என்ற நிலையில் இருந்து நாம் விடுபடுவது அவசியம். நிறவாதம் சகல வழிகளிலும் எம்மை எதிர்நோக்கித் தனது கூரிய பற்களை நீட்டிவரும் வேளையில், நிறவாதிகள் வெளிநாட்டவரைப் பற்றி அவதூறாகப் பிரசாரம் செய்துவருவதை ஊக்குவிக்கும் வகையில் எமது நடவடிக்கைகள் இருக்கக்கூடாது.

முதன்முறையாக, இவ்வருடம் தமிழர்கள் சிலர் கைது செய்யப்பட்டபோது ஒரு கைத்துப்பாக்கி கைப்பற்றப்பட்டிருக்கிறது. இது ஒரு அபாய அறிவிப்பு. வன்முறையின் உச்சத்தில் எவராவது அதனைக் கையாண்டிருப்பின் அதன் விளைவுகள் எவ்வளவு பாரதூரமாக இருந்திருக்கும் என்பது அச்சம் தருகிறது.

வன்முறையில் மிகச் சிலரே ஈடுபடுகின்றனர் என்றாலும், அதனால் ஏற்படும் அவப்பெயர் எல்லாத் தமிழர்களையும் பாதிப்பது என்பதால் தமிழ் மக்கள் அனைவரும் வன்முறைகளைக் கண்டிப்பதில் பின்னிற்காமல் ஈடுபட வேண்டும். அத்துடன், தமிழர்களைப் பிரதிநிதித்துவம் செய்யும் அமைப்புகள் இந்த வன்முறைகளைப் பகிரங்கமாகக் கண்டிப்பதுடன், வன்முறைகளை எந்தச் சந்தர்ப்பத்திலும் ஆதரிப்பதில்லை என்ற முடிவை எடுக்க வேண்டும். ஆனால் துரதிர்ஷடவசமாகப் பெரும்பாலான அமைப்புகள் நழுவல் போக்கையே காட்டுகின்றன. இதுவும் கடும் விமர்சனத்துக்குரியது.

• *சுவடுகள்*



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

செ.சஞ்சயன்

# புகைப்படக்கலை.

## புகைப்படக் கருவிகள்

இவற்றை முக்கியமாக நான்கு பிரிவுகளாகப் பிரிக்கலாம்.

| | புகைப்படக்கருவி வகைகள். | Film இன் அளவு |
|---|---|---|
| 1. | Compact camera | 110<br>24*36mm |
| 2. | SLR<br>Single Lence Reflekt. | 24*26 mm |
| 3. | Medium format | 6*4,5 cm<br>6*6 cm |
| 4. | Big format | 6*7 cm ,<br>6*9 cm மேற்பட்டவை |

மேற் கூறியவையை விட
Underwater camera .
Panorama camera.
ஆகிய புகைப்படக் கருவி வகைகளும் உண்டு.

## புகைப்படச்சுருள். Film.

இவை ஒளி நிலைமைகளுக்கு ஏற்ப மாறுபடும;.
Film பற்றிப் பேசும் போது **ISO** (Inter national standard organisation) மிகவும் முக்கியமானதாகும்.

### Film speed ஒளி கிரகிக்கும் வேகம்.

**ISO** என்பது படச்சுருளின; «ஒளி கிரகிக்கும் தன்மையை» க் குறிக்கும்.
**ISO** பின்வரும் எண்களினால் குறிக்கப்பட்டிருக்கும்.

**ISO: 6, 8, 10, 12, 16,20, 25, 32, 40, 50, 64, 80, 100, 125, 160, 200, 250, 350, 400, 500, 640, 800, 1000, 1250, 1600, 2000, 2500, 3200, 4000, 5000, 6400.**

www.tamilarangam.net

இலக்கம் 6 அதிக வெளிச்சத்தையும் இலக்கம் 6400 குறைந்த வெளிச்சத்தையும் கிரகிக்கும்தன்மையுடயவை.
அதாவது **ISO 6** பாவிக்கும் போது அதிக வெளிச்சம் இருத்தல் அவசியம். **ISO 6400** பாவிக்கும் போது ஓரளவு வெளிச்சம் இருந்தால் போதுமானது.
**ISO** எண்கள் கமராவினுள் ஒளி புகவிடும் நேரத்தை நிர்ணயிக்கும் முக்கிய காரணிகளில் ஒன்றாகும். குறைந்த **ISO** எண்கள் ஒளி புகவிடும் நேரத்தை அதிகமாக்கும், கூடிய **ISO** எண்கள் ஒளி புகவிடும் நேரத்தை குறைக்கும். சாதாரணமாக **ISO** 100 அல்லது **ISO** 200 அதிகமான நேரங்களில் பாவிக்கப்படும். **ISO** எண்களை அடிப்படையாகக் கொண்டு Film speed ஐ 3 விதமாகப் பிரிக்கலாம்.

1. Low speed ISO 6 தொடக்கம; 80 வரை.

   இந்த Film கள் மிகவும் தெளிவான படங்களைத் தருபவை. படங்களை பெரிதாக்கும் போது 20* 30 cm இன் பின்பே புள்ளிகள் தெரிய ஆரம்பிக்கும். Flash இன் ஒளிபாயும் தூரம் குறைவடையும்.

2. Normal speed ISO 100 தொடக்கம் 200 வரை.

   ஏறக்குறைய Low speed இன் தன்மைகளைக் கொண்டிருக்கும். ஆனால் flash இன் ஒளி பாயும் தூரம் குறைவடைய மாட்டாது.

3. High speed ISO 250 தொடக்கம் 6400 வரை.

   தெளிவில்லாத படங்களைத் தரும். 10*150 cm படங்களிளேயே புள்ளிகள் தெரிய ஆரம்பிக்கும். flash இன் ஒளி பாயும் தூரம் அதிகரிக்கும்.

## Film படச்சுருள்

இது இருவகைப்படும்.

1. Negetiv film.

   ( இவை **Color** என்னும் சொல்லினால் குறிக்கப்பட்டிருக்கும். உ+ம்: Fuji **Color**, Agfa **Color**.)



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இந்த film இல் படங்கள் ( Negativ) எதிர்மாறாக பதிவு செய்யப்பட்டிருக்கும;.

2. Positiv film.

( இவை **Crome** என்னும் சொல்லினால; குறிக்கப்பட்டிருக்கும். உ+ம்: Fuji Crome, Agfa Crome.)

இந்த film இல் படங்கள் நேரடியாகவே பதிவு செய்யப்பட்டிருக்கும்.

Negetiv film ஐ இரு வகையாகப் பிரிக்கலாம்.

1. Colour film.

இது இரண்டு வகைப்படும்.

1. சூரிய ஒளியின் போது பாவிக்கப்படுபவை.
2. மின் குமிழ் ஒளியின் போது பாவிக்கப்படுபவை.

2. Black & White film.

## Shutter speed and Aperture.
## ஒளிபுகு நேரமும், ஒளிபுகு துவாரமும்.

ஒரு படம் ஒழுங்கான முறையில் பதிவு செய்யப்பட ஒளிபுகு நேரமும், ஒளிபுகு துவாரமும் film இன் ஒளி கிரகிக்கும் தன்மைக்கு (ISO) ஏற்ப செயற்படுதல் முக்கியம்.

## Aperture ஒளிபுகும் துவாரம்.

ஒளிப்பதிவு செயற்பாட்டில் இத் துவாரத்தின் பங்கு மிகவும் முக்கியமானது.இத் துவாரம் அதிகமாக Lens இன் உட்பகுதியில் அமைந்திருக்கும். இத் துவாரத்தின் விட்டம் பின் வரும் இலக்கங்களினால் குறிக்கப்பட்டிருக்கும்.

1.2, 1.5, 1.7, 2.0, 2.4, 2.8, 3.5, 4.0, 5.6, 6.7, 8.0, 9.5, 11.0, 13.0, 16.0, 19.0, 22.0,



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

இலக்கம் 1 பெரிய துவாரமாகவும் இலக்கம் 22 மிகச் சிறிய துவாரமாகவும் காணப்படும;.



துவார இலக்கம் 1,2



துவார இலக்கம் 5,6



துவார இலக்கம் 22,0

ஒளிபுகும் துவாரத்தைக் கொண்டு புகைப்படத்தில் உள்ள எல்லா பகுதிகளையும் தெளிவாக அல்லது குறிப்பிட்ட ஒரு பகுதியை மட்டும் தெளிவாகக் காட்டலாம். பெரிய துவாரம் ( குறைந்த துவார இலக்கம் 1.2, 2.0, 3.5, ) நாம் எதை focas பண்ணுகிறோமோ அவ்விடம் மட்டுமே தெளிவாத் தெரியும். ஆனால் சிறிய துவாரம் (கூடிய துவார எண் 11, 13, 16, 19, 22) படத்திலுள்ள எல்லா பகுதிகளையும் தெளிவாகக்காட்டும்.

## Shutter speed ஒளி புகுநேரம்

ஒளிப்பதிவு செயற்பாட்டில் இதன் பங்கும் மிகவும் முக்கியமானது. இது Camara இன் பின் பகுதியில் ஒரு திரை போன்ற வடிவில் அமைந்திருக்கும். இது பின் வரும் இலக்கங்களினால் குறிக்கப்பட்டிருக்கும்.

**Bulb**, 30 sec, 15 sec, 10 sec, 8 sec, 4 sec, 2 sec, 1 sec, ¾ sec, ½ sec, ¼ sec, 1/6 sec, 1/8 sec, 1/15 sec, 1/30 sec, 1/60 sec, 1/125 sec 1/250 sec, 1/500 sec, 1/1000 sec, 1/2000 sec, 1/4000 sec, 1/8000 sec

இவை

| | |
|---|---|
| Bulb: | இது நாம் விரும்பும் அளவு நேரம் வரை ஒளியைப் புகவிடும். |
| செக்கன்: | 30 sec, 15 sec, 10 sec, 8 sec, 4 sec, 2 sec, 1 sec. |

www.tamilarangam.net

| | |
|---|---|
| நூற்றில் ஒரு செக்கன்: | ¾ sec, ½ sec,<br>¼ sec, 1/6 sec, 1/8 sec. |
| நூற்றில் பத்து செக்கன்: | 1/30 sec, 1/60 sec. |
| நூற்றில் நூறு செக்கன்: | 1/125 sec 1/250 sec, 1/500 sec. |
| நூற்றில் ஆயிரம் செக்கன்: | 1/1000 sec, 1/2000 sec,<br>1/4000 sec, 1/8000 sec. |

என பிரிக்கப்பட்டிருக்கும். ஒளிபுகும் நேரம் அதிகமாகும; (Bulb, 30 sec, 15 sec, 10 sec, 8 sec, 4 sec, 2 sec, 1 sec, ¾ sec, ½ sec, ¼ sec, 1/6 sec, 1/8 sec, 1/15 sec, 1/30 sec, ) போது படம் பிடிக்கப்படும் நிகழ்ச்சிகளின் அசைவுகளுமு; Film இல் பதிவாகும். ஒளிபுகும் நேரம் குறையும் போது (1/60 sec, 1/125 sec 1/250 sec, 1/500 sec, 1/1000 sec, 1/2000 sec, 1/4000 sec, 1/8000 sec) போது படம் பிடிக்கப்படும் நிகழ்ச்சிகளின் அசைவுகள; Film இல் பதிவாக மாட்டாது. அதிகமான Camara க்களில; Flash பாவிக்கும் போது 1/60sec, 1/125sec ஐ விட குறைந்த(1/250 sec, 1/500 sec, 1/1000 sec, 1/2000 sec, 1/4000 sec, 1/8000 sec) ஒளிபுகு நேரங்களை பாவிக்குமிடத்து படத்தின் அரைவாசிப் பகுதி கறுப்பாகக் காணப்படும். சிறப்பான படங்களைப் பெறுவதற்கு 1/60sec, 1/125sec ஆகிய நேரங்களைப் பாவிக்கவும்.

**(வரும்)**

## ஒரு பொழுதுக்குப் பிறகு

**றிஸ்வியூ முஹம்மத் நபீல்**

பூ நட்சத்திரங்கள்
அடையாளம் தெரிவிக்கும்
அணுக்கொள்கலன்களின் உள்ளே
வெட்டிப் பாயும் மேலுமொரு வலு.

பங்கீட்டு வலுப் பிணைப்பின்
கூந்தல்காரி
வஞ்சித்த காரணத்தால்
விஞ்ஞானமே பொய்க்கும்
இடியிடிக்கும் விதியாச்சு அப்பா!

எரிந்து முடிந்த சாம்பல் மேடு
கீற்றாகி எழும்
வாயுக்களிடையே
மின்னல் கீழிறங்கும்.

என்னூர்ச் சமுதாயச் சகுனத் தடைகளையே
நெற்றியில்
குங்குமச் சுடராக்கிப் பூசிமகிழ்ந்த
மனப்பூமி பற்றி மயானமாகும்;
மாயை வெளிக்கும்.

ஞானத் தந்திகளை நெருப்பாக்கிக் கொட்டும்
மரங்களின் சிலிர்ப்பில்
கண்களுருட்டி வரும் ஒரு உலகம்.

விஞ்ஞானம்
டைனஸோர் நம்பும் கிரகிப்புகளாக
நாளை.

● சாருந்தன்

# தாய் மொழிக்கல்வி



தாய்மொழிக்கல்வி என்ன என்று விளங்கிக் கொள்ள வேண்டுமானால் முதலில் மொழி என்பது என்ன என்று தெளிவு கொள்ள வேண்டும்.

மொழி என்பது மக்கள் தம்முணர்வோடு பிறப்பிக்கும் ஒலிகளாகிய குறியீடுகள் மூலம் தங்கள் எண்ணங்களையும், எழுச்சிகளையும் வெளியிடுவதற்கு உதவுகின்ற ஒரு அமைப்பேயாகும். மொழியினை ஆய்வாளர்கள் தம்முணர்வோடு பிறப்பிக்கும் ஒலிகள் என்று குறிப்பிடுவதற்குக் காரணங்கள் உண்டு. ஏனெனில் சில சந்தர்ப்பங்களில் மனிதன் தன் உணர்வின்றிப் பிறப்பிக்கும் ஒலிகளும் உண்டு. இன்பத்திலோ, துன்பத்திலோ ஒருவன் தன் சுய சிந்தனையைக் கடந்து அலறும் அலறல்கள் தன்னுணர்வின்றிப் பிறப்பித்தவை தான்.

அவை அவனுடைய உணர்ச்சிகளை மற்றவர்கள் புரிந்து கொள்ளுவதற்கு உதவலாமே அன்றி அவை மொழியாகிவிட மாட்டாது. எனவே தான் தம்முணர்வோடு பிறப்பிக்கும் ஒலிகள் மட்டுமே சீரானமொழி என்று ஆய்வுகள் கூறுகின்றன.

ஒவ்வொரு ஒலிக்கும் பொருள் இருப்பதில்லை. சில ஒலிகளின் சேர்க்கைக்குக் குறைந்த விகிதத்தில் பொருளிருக்கலாம். உதாரணமாக ஆ என்னும் ஒலிக்கோ ல் என்னும் ஒலிக்கோ தனித்து நிற்கையில் பொருள் இல்லை. ஆனாலும் இவ்விரண்டு ஒலிகளும் சேர்வதில் உருவான ஆல் என்னும் பதத்திற்கு மரம் என்ற பொருள் உண்டு.

ஒலிக் குறியீடான எழுத்துக்கள் ஒவ்வொன்றும் எந்த முறையில் இணைய வேண்டும் என்பதை தொல்காப்பியத்தின் வழி நன்னூல் மிகத் தெளிவாகத் தமிழ்மொழியில் கூறி நிற்கின்றது.

இம்முறைதனை ஒவ்வொரு மொழியிலும் அவர்தம் இலக்கண விதிகளுக்கமையக் காணமுடியும்.

மொழிக்கென்று ஓர் அமைப்புண்டு. அதைப் போலவே சொற்களுக்கும், சொற்றொடர்களுக்கும் கூட அமைப்புக்கள் உண்டு. அதன் அடிப்படையில் ஒலியமைப்பு, சொல்லமைப்பு, தொடரமைப்பு ஆகியவற்றை கற்பது தான் மொழிக்கல்வியைக் கற்பதாகும். இவ்வாறு இல்லாத மொழிப்பயிற்சி முறையான மொழியறிவினை குழந்தைகளுக்கு ஊட்டுமா என்பது கேள்விக்குறி தான்.

புலம் பெயர்வு சூழலில் இங்கு பிறந்த ஒரு குழந்தைக்கு அல்லது நீண்ட காலமாக இந்தச்

www.tamilarangam.net

சமூகத்தோடு கூடிய கல்வி மொழியில் ஊறிப்போன ஒரு மாணவனுக்குத் தாய்மொழிக் கல்வியைக் கற்றுத் தருவது என்பது சொந்தச் சூழ்நிலையினைப் போல மிக இலகுவான விடயம் அல்ல. ஏனெனில் அவர்கள் நாளாந்தம் அனுபவிக்கின்ற நோர்வீஜிய மொழிக்கும் எமது தாய் மொழிக்குமான தொலைவு அதிகம். ஒரு நோர்வீஜியக் குழந்தையினால் பக்கத்து நாடுகளின் மொழிகளை ( suvensk ) நுகரக் கூடிய அளவுக்கு ஆசிய மொழிகளை உணர முடிவதில்லை என்பது நடைமுறை உண்மை. எனினும் தாய் மொழிக் கல்வியினை புலம் பெயர்வு சூழலில் தம் குழந்தைகளுக்குப் புகுத்துவதில் ஆசிரியர்களை விடப் பெற்றோர்களின் பங்கு மிகப் பெரியது.

ஒரு குழந்தைக்கு தன் தாய்மொழிச் சூழலை வீட்டுக்குள் உருவாக்குவதன் மூலமும், தாய்மொழிக் கல்வியில் சுயவாசிப்புத் திறனைத் தூண்டுவதன் மூலமும், தாய்மொழியோடு கூடிய கல்வி முயற்சிகளில் அவர்களை ஈடுபடச் செய்வதன் மூலமும் சிறுவர்களிடையே தாய்மொழித் திறனை வளர்க்க முடியும்.

குழந்தைக்குப் பரீட்சயம் இல்லாத தாய்மொழிப் பதங்களை அவர்களுக்குத் தெரிந்த கல்வி மொழியில் உணர்த்துவதற்குப் பெற்றோர்கள் இயன்றவரை முயற்சிக்க வேண்டும். இப்பணியில் தாய் மொழிக்கல்விக் கூடங்களின் பங்கு மிகப் பெரியது.

மேலும் புலம் பெயர்ந்த நாடுகளில் தாய்மொழியைக் கற்றுத் தருகின்ற கல்விக் கூடங்களும் சரி, ஆசிரியர்களும் சரி மாணவரின் மொழித்திறனை எழுந்தமானமாக அவர்களின் வயதினைக் கொண்டு கணக்கிடாமல் தனிப்பட்ட முறையில் ஒவ்வொரு மாணவரினதும் மொழி உள்ளீட்டினை ஆராய்ந்து அல்லது பெற்றோர்கள் மூலமாக அவர்தம் பிள்ளைகளின் தாய்மொழித்திறனை மதிப்பீடு செய்து பின்னர் அவர்களுக்கு உரிய வகையில் மொழிக் கல்வியினை ஊட்டுதல் இன்றியமையாதது.

பாடத்திட்டங்களைப் பொறுத்தமட்டில் சங்க இலக்கியங்களைத் திணிப்பதைத் தவிர்த்து புலம் பெயர்வு வாழ்வோடு கூடிய விடயங்களையும் தாய்மொழிக் கல்வியில் இணைத்தல் அவசியம். அதைப் போல எமது இலக்கியப் படைப்புக்களையும் (புதிய+பழைய) அவர்களாகவே வாசிப்பதற்குரிய ஆர்வத்தினையும் ரசனையினையும் பிள்ளைகள் மனத்தில் விதைத்தல் ஆசிரியர்களின் பணியாகும். பெற்றோரும் இயன்றவரை தாய்மொழி சார்ந்த நல்ல சஞ்சிகைகளை வாங்கிப் படிப்பதன் மூலம் பிள்ளைகள் மத்தியிலும் சுய வாசிப்புத் திறனை தோற்றுவிக்க முடியும்.

தமிழைக் கற்றுத் தருகின்ற கல்விக் கூடங்களும், ஆசான்களும் தம்மாணவர்களுக்குத் தெளிவான முறையில் மொழிசார் இலக்கணத்தை உணர்த்துவது இன்றியமையாதது. எந்த ஒரு மொழியையும் பிழையின்றிப் பேசுவதற்கும், எழுதுவதற்கும், வாசிப்பதற்கும் முறையான அத்திவாரமாக அமைவது இலக்கணமாகும்!

●

## திகதியை எண்ணித் திசைபார்த்தேங்குவோர்

அகதிகள் ஆகி எங்கும்
அலைக்கழிந்துழல்வர் துன்பச்
சகதியில் புழுக்களைப் போல்
சக்தியெல்லா மிழந்தார்
திகதியை எண்ணி வந்த

திசையினைப் பார்த்து ஏங்கும்
அகதிகள் மீட்சி காணும்
அரும் பணிக் குதவுவீரே!

புத்தளம் ஷாஜஹான்

www.tamilarangam.net

# என் தாத்தா பேசுகிறார்

பால் சிடியாவ் சிகு - றொடீஷியா
**தமிழில்: இந்திரன்**



ஒரு மைல்கூட நடக்க முடியாவிட்டாலும்
அவர்கள் சொல்கிறார்கள்
தாம் உடல்நலத்துடன் இருப்பதாக
அவர்கள் வயதில் நான்
மறுநாள் விடியலின் போரில் சண்டையிடுவதற்காக
இரவில் நாற்பது மைல் நடந்திருக்கிறேன்.

அவர்களது காலுறை நனைந்துவிட்டவுடனேயே
சளி பிடித்துக் கொள்கிறது.
ஆனால் காலுறை அற்ற எனது
கால்களே நனைந்த போதுகூட
நான் தும்மியது கிடையாது.
இருந்தாலும் அவர்கள்
என்னைக் காட்டிலும் உடல்நலத்துடன் இருப்பதாகச்
சொல்கிறார்கள்.

கம்பிச் சுருள் கட்டிலில்
மெத்தை படுக்கையில் கூட
அவர்கள் தூங்குவதற்கு தூக்க மாத்திரை வேண்டும்.
ஆனால் நான்
கோரப் புற்கள் என் விலா எலும்புகளை குத்த
மரத்துண்டு ஒன்றின்மீது தலைவைத்து
ஒரு குழந்தையைப் போலத் தூங்கிக் குறட்டை விடுவேன்.

அவர்கள் தங்கள் மூக்கைச் சிந்தி
அதைத் தன் சட்டைப் பைகளில்
பத்திரப்படுத்திக் கொள்கிறார்கள்.
அதுதான் சுத்தமென்றும் சொல்கிறார்கள்.
ஆனால் நான்
மூக்கைச் சிந்தி நெருப்பில் போட்டால்
காட்டுமிராண்டித்தனம் என்று சொல்கிறார்கள்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



என் அன்புக்குரியவர்கள் யாரேனும் இறந்துவிட்டால்
நான் வெட்கப்படாமல் அழுவேன்.
யாரேனும் நகைச்சுவையாகச் சொன்னால்
என் முழுமனத்துடன் சிரிப்பேன்.
அவர்கள்
அழுவது ஏதோ குற்றமென்பது போல
கண்ணீரைக் கட்டுப்படுத்திக் கொள்கிறார்கள்.
சிரிப்பதுகூட தவறு என்பது போல
சிரிப்பை அடக்கிக் கொள்கிறார்கள்.
அவர்களுக்கு மனோவைத்தியர்கள் தேவைப்படுவதில் ஆச்சரியமில்லை.

என்னைக் காட்டிலும் மன அடக்கம் உள்ளவர்கள்
என்று அவர்கள் நினைக்கிறார்கள்.
அடிமை காலங்களில் எங்கள் பெண்கள்
குறைவான ஆடை அணிந்தபோதிலும்
பிறன்மனை நோக்குதல் அங்கில்லை.
ஆனால் சட்டை மாட்டும் கொக்கியில்
சிறுபகுதி தெரிந்தால்கூட
அவர்கள் பைத்தியமாகிவிடுகிறார்கள்.

நான் ஒன்றுக்குமேல் பெண்களை மணந்துகொண்டபோது
நரகத்துக்குத்தான் போவேன் என்று சொன்னார்கள்
அவர்களோ,
ஒரு மனைவியும், பல வைப்பாட்டிகளும் வைத்துக்கொண்டு
உலகத்தை ஏமாற்றிவிட்டதாய்ப் பூரிக்கிறார்கள்.

எனது வழிமுறைகளை மாற்றிக் கொள்ளுமாறு
என்னை வற்புறுத்தும் முன்னால்
அவர்கள் முதலில்
தங்களுக்குத் தாங்களே உண்மையாக
இருக்கக் கற்றுக் கொள்ளட்டும்
என்று சொல்கிறார்
கர்வமிக்க எனது தாத்தா.

---

கவிஞர்: ரொடீஷியாவின் ஒரே செய்தித் தாளின் ஆசிரியர்.
க்ஷோனா மொழியில் ஐந்து நூல்கள் எழுதியுள்ளார்.
1924ல் பிறந்த இவர் பயிர்த் தொழிலில் பட்டம் பெற்றுப்
பயிர்த்தொழில் ஆசிரியராக 1960வரை இருந்தவர்.

www.tamilarangam.net

# சுவடுகள்

*சமாதானத்தை விரும்புவதாகக் கூறிக்கொண்டு பதவிக்கு வந்த சந்திரிகா அரசின் இனவாத முகங்கள் ஒவ்வொன்றாகத் திரைவிலகி வெளித் தெரிகின்றன. தமிழ் முஸ்லிம் மக்களது பிரச்சனைகள் தீர்க்கப்பட வேண்டும் என்ற எண்ணம் கொண்ட ஒரேயொரு இலங்கைத் தலைவர் என்று பத்திரிகைகளால் மாயை ஏற்படுத்தப்பட்ட சந்திரிகா ஏனைய அரசுகள் போலவே ஒரு அரைகுறைத் தீர்வுத் திட்டத்தைச் சமர்ப்பித்துவிட்டுத் தனது இன அழிப்பினை இராணுவம் மூலம் தொடருகிறார்.*

*சிங்கள இனவாத அரசுகளுக்கிடையில், தமிழ் மக்களை அழிப்பது என்ற அடிப்படையில் எதுவித பேதமும் இல்லை. விடுதலைப் புலிகளுக்கு எதிரான யுத்தம் என்று அறிவிக்கப்படும் யுத்தம் எப்போதும் தமிழ் மக்களை வகைதொகையின்றி அழிக்கும் இனஅழிப்பு யுத்தமாகவே இருந்து வந்திருக்கிறது. இப்போதைய யுத்தமும் அதற்கு விதிவிலக்கானதல்ல.*

*இப்போதைய யுத்தம் தொடங்கியதும் பொருளாதாரத் தடையை மீண்டும் அறிவித்துத் தனது இனஅழிப்பு நடவடிக்கையின் தீவிரம் குறையாது பார்த்துக்கொண்ட அரசு, தற்போது மருந்துகளையும் வடக்கே போகவிடாது தடுத்து முழுமையான இன அழிப்பில் ஈடுபட்டுள்ளது. வடக்கே அடிப்படை வாழ்வுக்குத் தேவையான பொருட்கள் மட்டுமன்றி, நெருக்கடியான காலங்களில் ஏற்படும் அளவிறந்த நோய்களைத் தீர்க்கத் தேவையான மருந்துகளையும் தடுத்துள்ளது அரசு. இது பெருமளவில் குழந்தைகளைப் பாதித்துள்ளதாக வடக்கில் இருந்து செய்திகள் வந்துள்ளன. யுத்த முனையில் தோல்விகளையே சந்தித்த அரசு, தனது கோழைத்தனத்தின் வெளிப்பாடாகக் தமிழ்க் குழந்தைகள் மீதும் பிரகடனம் செய்துள்ளது.*

*இந்நிலையிலும் சில தமிழ்க் குழுக்கள் மனிதாபிமான யுத்தம் நிகழ்த்துமாறு அரசிடம் கோருகின்றன. உடனடியாக மருந்துகள் மீதான தடையையும், எல்லாவித பொருளாதாரத் தடைகளையும், கடல்வலயத் தடைகளையும் நீக்கி, நிரந்தர யுத்த நிறுத்தம் ஒன்றை அறிவிப்பதே தற்போது அரசு செய்ய வேண்டியது. அதைச் செய்யாதவரை இந்த அரசும் தமிழ் மக்களை அழிப்பதில் முன்னைய அரசுக்குச் சளைத்ததல்ல. இதற்குச் சமாதானம் என்ற நாடகம் வெறும் முகமூடியே. அரச படைகளது இனவாத யுத்தத்துக்கு மனித முகம் இல்லை. அது தனது கோரமுகத்தை வெளிக்காட்டியே தீரும். கொழும்புத் தமிழ்க் குழுக்களால் அரசியல் ரீதியில் எதையும் வென்றெடுக்க முடியாது என்பதை நிரூபிக்கக் குழந்தைகள் பலியாவது மிகவும் துயர்தருவது.*

சுவடுகள் 68,
ஆனி 1995

Suvadugal, A tamil monthly from Norway, Issue nr 68.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# வியட்னாம் விடுதலைக்கு வயது இருபது

***வியட்னாம் போரில் உயிரிழந்த வியட்னாம் மக்களின் தொகை முப்பது லட்சம்வரை என மதிப்பிடப் பட்டுள்ளது. வியட்னாம் போர் முடிந்து இருபது ஆண்டுகள் நிறையும் இந்தச் சந்தர்ப்பத்தில் இத் தகவல்கள் வெளிவருகின்றன. இறந்தவர்கள் மட்டுமன்றி, யுத்தத்தால் காயம் அடைந்தோரின் எண்ணிக்கை இருபது லட்சம்வரை. போரில் 58ஆயிரம் அமெரிக்கப் படையினர் உயிரிழந்தனர்.***

*வியட்னாமின் 150 வருட வரலாறு :*

*1859முதல் 1883வரை: பிரான்சின் ஆக்கிரமிப்பின் கீழ் இருந்தது (இந்தோசீனம் என)*
*1940: ஜப்பான் தனது கட்டுப்பாட்டினுள் கொண்டுவந்தது.*
*1946: பிரான்சின் ஆக்கிரமிப்புக்கு எதிரான போர் நாடு முழுவதும் உக்கிரம் அடைந்தது.*
*1954: ஜெனிவா மாநாட்டில் வியட்னாம் இரண்டாகப் பிரிக்கப் பட்டது. (வடக்கு தெற்கென) தேர்தல் வைக்கப்பட வேண்டும் என முடிவு செய்யப்பட்டது.*
*1959: வட வியட்னாமில் இருந்து (வியட்கொங் என்றழைக்கப்பட்ட) போராளிகளினால் வடக்கில் இருந்து தெற்கு நோக்கிய விடுதலைப் போர்த் தந்திரம் வகுக்கப்பட்டு ஆரம்பிக்கப்படுகிறது. இது ஹோ சி மின் பாதை என் அழைக்கப் பட்டது.*
*1962: அமெரிக்கா 12ஆயிரம் இராணுவ ஆலோசகர்களைத் தென் வியட்னாமிற்கு அனுப்பியது.*
*1963: தென் வியட்னாம் அதிபர் டியம் ( Diem ) அமெரிக்காவின் சதிப்*





தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net




*புரட்சி மூலம் கொலை செய்யப்பட்டு அமெரிக்க அரசு உருவாக்கப் பட்டது.*
*1964: அமெரிக்காவின் போர் விமானங்கள் வட வியட்னாமின் முக்கிய நகரங்கள் குண்டுவீசின.*
*1965: அமெரிக்காவின் கடற்படை டா நங் நகரில் மார்ச் எட்டாம் திகதி வந்திறங்கியது. இதுவே அமெரிக்கப் படைகள் வியட்நாமில் இறங்கிய முதல் நிகழ்வு.*
*1967: அமெரிக்காவின் ஐந்துலட்சம் துருப்புகள் வியட்நாமில் நிலைகொண்டிருந்தன. இராணுவ ஆக்கிரமிப்புக்கு எதிரான போராட்டங்கள் தீவிரமாகின.*
*1968: அமெரிக்க ராணுவ நிலைகள்மீது தொடர்ந்த தாக்குதல்களை வடவியட்நாமியரும், தென்வியட்நாம் போராளிகளும் தொடுத்தனர். 'மல்லாய்' என்ற கிராமத்தில் புகுந்த அமெரிக்கப் படைகள் குழந்தைகள், பெண்கள் உட்பட 400 பேரைப் படுகொலை செய்தன. வியட்நாமில் அமெரிக்கப் படைகளின் எண்ணிக்கை ஐந்தரை லட்சத்தை அண்மித்தது.*
*வட வியட்நாம் மீதான குண்டுவீச்சு ஒக்ரோபர் மாதத்தில் நிறுத்தப் பட்டது.*
*1969: அமெரிக்க அதிபர் நிக்சனின் பணிப்பில் அமெரிக்கப் படைகள் மீளப் பெறல் ஆரம்பித்தது.*
*கம்பூச்சிய நாட்டின் மீது இரகசியக் குண்டுவீச்சுகள் தொடங்கின.*
*1975: ஏப்ரல் முப்பதாம் திகதி வியட்நாம் போராளிகள் சைகூன் (தென் வியட்நாமின் முக்கிய) நகரைக் கைப்பற்றினர்.*

www.tamilarangam.net

அயலான்

# கண்டது கேட்டது கண்டவர் சொன்னது

திரைப்படத்தின் நூற்றாண்டான இந்த வருடம் தமிழ்த் திரையுலகுக்குக் குறைந்தது மூன்று புதிய இயக்குனர்கள் வந்துள்ளனர். இந்த மூன்று இயக்குனர்களிலும் ஒரு குறிப்பிடத்தக்க அம்சம் அவர்கள் ஏற்கனவே திரையில் தோன்றியவர்கள் என்பது. மூவருமே நடிப்பில் திறமை காட்டியவர்கள். சத்யராஜ், நாஸர், சுகாசினி ஆகியோரே அவர்கள். வில்லாதிவில்லன், அவதாரம், இந்திரா என்ற படங்கள் அவர்கள் இயக்கியவை. முதன்முதலாக ஒரு கலைஞர் கூட்டத்தின் வாழ்வைப் பேசவந்த அவதாரம் தமிழ்த் திரையுலகுக்கு ஒரு புதிய பரிமாணம் சேர்த்திருக்கிறது. (கரகாட்டக்காரன் படத்திற்கும் இதற்கும் உள்ள அடிப்படை வேறுபாட்டைப் பலர் உணர்ந்திருக்கலாம்) அவதாரம் படத்தைப் பார்ப்பவர்கள் எந்தப் பாத்திரத்தையும் தம்மில் ஒருவராக அல்லது அருகில் இருப்பவராக உணர முடிந்திருக்கிறது என்பது நாஸரின் வெற்றி. கடைசிச் சண்டையையும், ஒரு பாடல் காட்சியையும் தவிர்த்திருந்தால் இந்தப் படம் இன்னும் உயர்ந்த தரத்தில் இருக்கும் என்பதில் சந்தேகமில்லை. சாதாரண தமிழ்த் திரைப்பட ரசிகர்களின் சுவைக்குச் சமரசம் செய்துகொள்ளாத படம் என இதனைக் குறிப்பிடலாம். முக்கியமாக நகைச்சுவை என்ற பெயரில் அடிக்கும் கும்மாளங்கள் எதுவும் இல்லாதது பெரிய நிம்மதி. படத்தில் அனைவரதும், குறிப்பாக நாஸர், ரேவதியின் நடிப்பு மிக அற்புதம்.

இந்திரா பல காரணங்களால் நல்ல திரைப்படம் என்று குறிப்பிடப்பட முடியாதது. நல்ல அம்சங்கள் இருப்பதால் மாத்திரம் ஒரு படம் நல்லதாக ஆகிவிட முடியாது என்பதற்கு இந்திரா சாட்சி. அடுத்த தலைமுறை மாற்றத்தைக் கொண்டுவரும் என்ற நம்பிக்கையைத் தரும் இறுதிக் காட்சிதான் மனதில் நிற்கிறது. படத்தில் தேவர்மகன் பாதிப்பும் ஆங்காங்கே தெரிகிறது. சமூகத்திற்கு ஏதாவது நல்லது சொல்ல வேண்டும் என்று சுகாசினிக்கு விருப்பம் இருந்திருக்கக் கூடும். அதுதான் நோக்கம் என்றால், படத்தில் கையாளப்பட்ட சாதிப் பிரச்சனை இன்னும் தெளிவாகக் கையாளப் பட்டிருக்க வேண்டும்.





தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

சத்தியராஜ் - மணிவண்ணன் பாணி என்று ஒன்று இருப்பதைத் தமிழ்ப்பட ரசிகர்கள் அறிவர். வில்லாதிவில்லன் அதுதான். நக்மாவைப் பார்க்க விரும்பும் ரசிகர்களைக் குறிவைத்துத் தரப்பட்ட காட்சிகளும், படத்தை சத்யராஜே ஆக்கிரமித்திருப்பதும் முக்கிய உறுத்தல்கள். தவிரவும் வழமையான தமிழ்த் திரைப்படங்களில் இருந்து எந்த வேறுபாட்டையும் இந்தப் படத்தில் காண முடிவதில்லை. சத்யராஜ் நல்ல நடிகராக இருக்கலாம். நல்ல இயக்குனராக இல்லை என்பதைத்தான் படம் காட்டுகிறது.
அடுத்த வருடத்தில் இன்னும் நடிகர்கள் புது இயக்குனர்களாக வரக்கூடும். வருபவர்களாவது தமிழுக்குப் பெருமை சேர்க்கும் படைப்புகளைத் தரட்டும்.

இந்த வருடம் கோடை மிகக் கொடுமையானது. வழமையாக வரவேண்டிய காலத்தில் வெய்யில் வரவில்லை. மழை வந்தது. வெய்யில் வந்தபோது வெப்பநிலை மிக அதிகமாக இருந்தது. பல வருடங்களுக்குப் பின் நோர்வேயில் பாரிய வெள்ளம் ஏற்படவும் இந்த ஒழுங்கற்ற காலநிலை காரணமாயிற்று. வெய்யில் எங்கள் நாடுகளைப் போலவே இந்த நாடுகளையும் கடுமையாகத் தாக்கியது. ஐரோப்பிய நாடுகளிலும் வெப்பநிலை காரணமாக மக்கள் இறக்கக்கூடும் எனப் பலரை நம்ப வைத்தது இந்தக் கோடை.
இவ்வருடம் கோடை வெப்பம் தாங்காது அமெரிக்காவில் உயிரிழந்தவர்கள் ஆயிரம் பேருக்கு மேல். இந்தியாவில் கோடை காலத்தில் பலர் இறப்பது பற்றிய செய்திகளைக் கேள்விப் பட்டிருக்கிறோம். ஆனால் உலகின் செல்வந்த நாடுகளில் ஒன்றான அமெரிக்காவில் இது நிகழ்வது கொஞ்சம் ஆச்சரியம்தான். அமெரிக்காவில் உயிரிழந்தவர்கள் பெரும்பாலும் வசதியற்றவர்கள், வயோதிபர்கள், நோயாளிகள். இவர்கள் வசித்த இடங்களில் குளிரூட்டி அறைகள் இருக்கவில்லை. ஆபத்தான நேரத்தில் உதவி புரிவதற்கான வசதிகள் போதியளவு இல்லை. முக்கியமாக வயோதிபர்கள் நேரடியான பராமரிப்புப் போதியளவு கிடையாதவர்கள். இந்தக் குறைபாடுகளை ஏன் அமெரிக்கா நீக்கக்கூடாது? நீக்குவதில் ஒன்றுமில்லை. அமெரிக்காவுக்கு இதற்கெல்லாம் நேரம் கிடையாது. சாகக் கிடக்கும் தனது பிரஜைகளை விட, அமெரிக்காவின் முக்கிய கவனம் எல்லாம் ஏனைய நாடுகள் என்ன செய்கின்றன என்பதில்தான் இருக்கிறது. யாராவது ஆயுதம் விற்கிறார்களா? யார் வாங்குகிறார்கள்? தனக்குச் சார்பான அரசுகள் ஏதாவது சிக்கலில் மாட்டிவிட்டனவா? தனக்கு எதிரான அரசுகள் எந்தச் சிக்கலில் மாட்ட வைக்கப் படலாம்? உலகின் பலச் சமநிலை தனது சார்பிலேயே எந்த நேரமும் நிற்கிறதா? என்று பல சிந்தனைகள் அமெரிக்க ஆட்சியாளரைப் பிடித்து உலுக்கிக் கொண்டிருக்கின்றன. வறியவர்கள்தானே, செத்துப் போகட்டும்! முதியவர்கள்தானே உயிரிழந்து போகட்டும் என்கிறது அமெரிக்கா. இதுதான் அமெரிக்க ஜனநாயகம். வாழ்க அமெரிக்கா!



இலங்கையில் யாழ்ப்பாணத்தில் இருந்து ஒரு எழுத்தாளன் வெளிவருவது ஆச்சரியம் அல்ல. போர்க் காலத்திலும் கிட்டத்தட்ட அப்படித்தான். பொருளாதார ரீதியிலும், கல்வி வசதிகளிலும் யாழ்ப்பாணம் எப்போதும் மேம்பட்டே இருந்திருக்கிறது. போர் நிகழ்ந்தாலும் யாழ்ப்பாணத்திற்குள் (வெளியிலிருந்து) செல்லும் பணம் இந் நிலையை ஓரளவு காப்பாற்றும். ஆனால் மலையகம் அப்படியல்ல. சுதந்திரம் பெற்று இன்றுவரை, இலங்கையின் மிக மோசமான வாழ்வை மலையக மக்கள்தான் வாழ்கின்றனர். அவர்களது தலைமைகள் தமது சொகுசைப் பார்க்கும் அளவுக்கு, மக்களின் அடிப்படைப்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

பிரச்சனைகளைப் பார்ப்பதில்லை. இவ்வாறான நிலைகளில் இலக்கியத்தில் ஈடுபடவும், ஈடுபாட்டை வளர்க்கவும் அம்மக்களுக்கான வாய்ப்புகள் மிகக் குறைவு.

சிக்கலான நிலைகளிலும் நம்பிக்கை தரும் இதழாகக் குன்றின் குரலைப் பார்க்கக் கிடைக்கிறது. இவ்வருட ஆரம்பத்தில் பதினான்காவது ஆண்டு மலரைப் பார்க்க முடிந்தது. மிக அழகான புகைப்படம் ஒன்று அட்டையை அலங்கரிக்கிறது. உள்ளே படைப்புகளும் சிறப்பானவையாக இருந்தன. எழுத்தாளர் புதுமைப்பித்தனின் கடிதம், மல்லிகை.சி.குமார் கவிதை, கா.சிவத்தம்பி, மாத்தளை கௌதமன், லெனின் மதிவாணன், சாரல்நாடன், ஜெ.சற்குருநாதன், பொஹவந்தலாவை மகேந்திரன், செ.கணேசலிங்கம், இர.சிவலிங்கம் அ.அறிவுநம்பி, சுப்பிராமைந்தன் போன்றோர் எழுதியுள்ளனர். இந்த இதழில் துறவியின் காதல் என்ற சி.பன்னீர்செல்வத்தின் கதை இடம்பிடித்துள்ளது.

இதழ் சிறப்புறுவது அட்டைப் படத்தில் என்றுகூடச் சொல்லலாம். அவ்வாறு ஒரு கமெரா ஓவியத்தை கொட்டாரமுல்லை யூ.எம்.பாரூக் படைத்துள்ளார். சர்வதேச ரீதியில் அதிக கவனம் ஈட்டிய ஒரு இலங்கைப் புகைப்படக் கலைஞரான இவரது படம் அழகூட்டும் இந்தச் சிறப்பு மலரின் ஆசிரியர் அந்தனி ஜீவா. தொடர்புகளுக்கு: 30 புஸ்பதான மாவத்தை, கண்டி.

இதழின் ஆசிரியரான அந்தனி ஜீவா, மூத்த தலைமுறை எழுத்தாளரான அ.செ.முருகானந்தனின் மனிதமாடு கதைத் தொகுதியை மீளக் கொண்டுவரும் முயற்சியில் மகாஜனக் கல்லூரிப் பழைய மாணவர்களின் ஆதரவுடன் ஈடுபட்டுள்ளார் என அறிய முடிந்தது. பத்தாண்டுகளுக்குப் பின் அ.செ.மு.வுக்கு ஒரு புத்துயிர்ப்பு.

# ஒரு பொழுதுக்குப் பிறகு

**றிஸ்வியூ முஹம்மத் நபீல்**

பூ நட்சத்திரங்கள்
அடையாளம் தெரிவிக்கும்
அணுக்கொள்கலன்களின் உள்ளே
வெட்டிப் பாயும் மேலுமொரு வலு.

பங்கீட்டு வலுப் பிணைப்பின்
கூந்தல்காரி
வஞ்சித்த காரணத்தால்
விஞ்ஞானமே பொய்க்கும்
இடியிடிக்கும் விதியாச்சு அப்பா!

எரிந்து முடிந்த சாம்பல் மேடு
கீற்றாகி எழும்
வாயுக்களிடையே
மின்னல் கீழிறங்கும்.

என்னூர்ச் சமுதாயச் சகுனத் தடைகளையே
நெற்றியில்
குங்குமச் சுடராக்கிப் பூசிமகிழ்ந்த
மனப்பூமி பற்றி மயானமாகும்;
மாயை வெளிக்கும்.

ஞானத் தந்திகளை நெருப்பாக்கிக் கொட்டும்
மரங்களின் சிலிர்ப்பில்
கண்களுருட்டி வரும் ஒரு உலகம்.

விஞ்ஞானம்
டைனஸோர் நம்பும் கிரகிப்புகளாக
நாளை.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

## தமிழகத்தில்

# குற்றப்பரம்பரையாகக் கருதப்படும் ஈழத்தமிழர்கள்

தமிழ்நாடு இளைஞர் பேரவை-தமிழ் ஈழ விடுதலைப்போராட்டம் உள்ளிட்ட உலகத்திலுள்ள பல்வேறு இன விடுதலைப் போராட்டத்தை ஆதரிக்கின்ற அமைப்பு என்பதை தாங்கள் அறிவீர்கள். இந்திய தலைமை அமைச்சர் இராசீவ் காந்தி கொல்லப்பட்ட போதும் தமிழகத்தில் ஈழம், தமிழ் என்ற சொற்களே உச்சரிப்பதற்கு மறைமுகமாகவும் நேரடியாகவும் தடை செய்யப்பட்ட போதும் தமிழ்நாடு இளைஞர் பேரவை 1-9-91 இல் 'ஈழவிடுதலை அங்கீகரிப்பு மாநாடு' நடத்த முயற்சித்து தடையை ஓரளவு தகர்த்தது. பல்வேறு அமைப்புகள் தொடர்ந்து ஈழச் சிக்கலைப்பேசின இப்படியெல்லாம் ஈழ விடுதலைக்கு ஆதரவாக உள்ள தமிழகத்தில்... ஈழத் தமிழ் அகதிகள் நிலை என்ன?

சிங்கள இனவெறி அரசு கடந்த நாற்பது ஆண்டு காலமாக ஈழத் தமிழர்களை ஒடுக்கி வருகிறது. ஈழத்தமிழர்கள் தம் சொந்த மண்ணிலேயே இரண்டாந்தர குடிமக்களாக்கப்பட்டனர். ஈழத்தமிழர்களுக்கு ஓட்டுரிமை பறிக்கப்பட்டது, தமிழ் வழியில் படிக்கத்தடை, வேலை வாய்ப்பு மறுக்கப்பட்டது, விளைவு? விடுதலைப்புலிகளின் வீரஞ் செறிந்த விடுதலைப் போராட்டம். சிங்கள அரசின் இந்த பாசிச இன வெறித்தாக்குதல் ஈழத் தமிழர்களை உலகம் முழுவதும் அகதிகளாக்கியது. குறிப்பாக 1983 ஆம் ஆண்டு இலங்கையில் நடைபெற்ற இனக்கலவரத்தை அடுத்து ஈழத்தமிழ் மக்கள் பெருமளவில் அகதிகளாக இந்தியாவில், தமிழ்நாட்டில் தஞ்சம் புகுந்தனர். இன்னும் சிலர் கனடா, லண்டன், செர்மன், பிரான்சு சுவிட்சர்லாந்து, நார்வே, டென்மார்க், ஆசுட்ரேலியா போன்ற உலக நாடுகளில் அகதிகளாக தஞ்சம் புகுந்தனர். தொடக்கத்தில் பூரண ஆசியுடன் வரவேற்கப்பட்ட ஈழத்தமிழ் அகதிகள் இன்று, அவர்கள் விருப்பத்திற்கு மாறாக திரும்பிச்செல்ல விரும்புவோரை அனுப்பாமலும், இங்கேயே இருக்க விரும்புவோரை திரும்பச்செல்லும்படியும் நிர்பந்திக்கிற போக்கு நிலவுகிறது.

இந்திய, தமிழக அரசுகளுக்குத் தெரிவித்துள்ளனர். இதுவரையில் எவ்வித நடவடிக்கையும் இல்லை. இது குறித்து தமது அதிருப்தியை தெரிவித்த ஐ.நா. அகதிகள் புனர் வாழ்வு அமைப்பு தமிழகத்திலுள்ள அகதிகளைத் தம் பொறுப்பில்எடுத்துக் கொள்வதாகக் கூறியதையும் இந்தியா மறுத்து விட்டது. இப்படியாக வாழவும் வழியின்றி, சாகவும் வழியின்றி வாழும் ஈழத் தமிழர்கள் விரக்தியடைந்து தம் தாய்நாட்டிற்கே திரும்பி விடலாமா என எண்ணுகின்றனர். இந்நிலை குறித்து எதிர்க்கட்சிகளும் மனித உரிமை அமைப்புகளும் பலமுறை எடுத்துக்கூறியும் அரசின் மாற்றாந்தாய் மனப்பான்மை தொடர்வதாகவே இருக்கின்றது.

'சிறப்பு முகாம்கள்' அரசின் அதாவது மாவட்ட ஆட்சியர் நேரடி பார்வையில் இருக்க வேண்டும் என்பது விதி. ஆனால், 'தமிழகத்தில் நடைபெறும் கொலை, கொள்ளைகளுக்கு அகதிகளாக தங்கியிருக்கும் ஈழத்தமிழர்களே காரணம்...' என முதல்வர் செயலலிதா சட்டமன்றத்தில் பேசியதைத் தொடர்ந்து ஈழத்தமிழ் அகதிகளுக்கு மேலும் பாதுகாப்பற்ற சூழ் நிலை ஏற்பட்டுள்ளது. மேலும் போலீசுத் துறையின் கட்டுப்பாட்டிற்குள் சிறப்பு முகாம்கள் நடைபெறுகின்றன. பெயரளவில் தான் நிர்வாகத்துறை கட்டுப்பாடு. குறிப்பாக போலீசுத் துறையில் 'க்யூ பிரிவு' போலீசார் ஆதிக்கம் நிலவுகிறது. இந்நேரத்தில் க்யூ பிரிவு போலீசார் பற்றியும் நாம் தெரிந்துகொள்வது அவசியமாகிறது. தமிழகத்தில் நக்சல் பாரி இயக்கத்தை ஒடுக்குவதற்காக "வீரப்பன் புகழ்" வால்டர் தேவாரத்தால் உருவாக்கப்பட்டது. தற்போது ஈழத் தமிழர்களையும், தனித் தமிழ்நாட்டு விடுதலைக்காகப்போராடுபவர்களையும் வெறிபிடித்து வேட்டையாடிவரும் சட்ட விரோத பிரிவு ஆகும். இது குறித்து இந்தியாவின் தலைசிறந்த மனித உரிமைப் போராளியும், ஆந்திர தேச சிவில் உரிமைக்கழக பொதுச் செயலர் டாக்டர் பாலகோபால் அவர்கள் கூறி

www.tamilarangam.net

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

தமிழகத்தில் தஞ்சமடைந்துள்ள ஈழத் தமிழ் அகதிகள் பல்வேறு வடிவங்களில் கொடுமைப்படுத்தலுக்கும், புறக்கணிப்பிற்கும் உள்ளாகி இருக்கும் வேளையில் 'சிறப்பு முகாம்' எனும் பெயரில் சிறைச்சாலையை விட மிகக் கோரமாக சித்திரவதை அனுபவிக்கும் அகதிகளின் அவல நிலையை வெளியுலகிற்கு தெரியப்படுத்தி நியாயம் கிடைக்க வழிகோலுவதே எமது விருப்பமாகும், பலத்த காவலுக்கும், கட்டுப்பாட்டிற்கும்

## தமிழ்நாடு இளைஞர் பேரவை

மத்தியிலும் 'சிறப்பு முகாம்' பற்றி சேகரித்த சொற்ப செய்திகளே நம்மை திடுக்கிட வைக்கின்றது. ஈழத்தமிழ் அகதிகளின் மீதான மனித உரிமை மீறலுக்கு எதிராகவும், இந்திய, தமிழக அரசுகளின் அராசகத்தை தடுத்து நிறுத்தி ஈழத் தமிழர்களுக்கு நியாயம் கிடைக்க இந்த அறிக்கை நிச்சயம் துணை நிற்கும் என நம்புகிறோம்.

ஈழத் தமிழர்கள் மீது ஏதாவது காரணம் காட்டி

- O சிறப்பு முகாமில் அடைத்தல்
- O பொய் வழக்கு போடுதல்
- O குறைந்த அளவு உணவுப்பொருள் வழங்குதல். அதையும் ஒழுங்காக வழங்காது வஞ்சித்தல்
- O நடமாட்டத்தை கட்டுப் படுத்தி ஒடுக்குதல்
- O வேலை செய்வதை தடுத்தல்
- O சுதந்திரமாக வணிகம் செய்ய முயற்சித்தால் இடையூறு செய்தல்
- O பெண்களை பாலியல் வன்முறைக்கு உட்படுத்துதல்
- O ஒவ்வொரு அகதியையும் பயங்கரவாதியாகச் சித்தரித்தல்
- O கல்லூரி, பள்ளிகளில் வழங்கிய சலுகைகளை நீக்குதல்

என அடக்குமுறை ஏவப் படுகிறது. இவ்வாறான நடவடிக்கைகளினால் வெறுப்புற்ற ஈழத் தமிழர்கள் தமது அதிருப்தியை பல வழிகளில் யுள்ள கருத்தை நினைவுபடுத்திக் கொண்டு மீண்டும் அகதிகள் பிரச்சனைக்குள் போவோம்.

'பொதுவாக சட்டம் ஒழுங்கு போலீசு என்றால் அவர்களுக்கென காக்கிச் சீருடை இருக்கிறது; காவல் நிலையம் இருக்கிறது. யாரையாவது இவர்கள் கைது செய்தால் நாம் முறைப்படி மேலதிகாரிகளை நாடி நியாயம் கேட்கலாம்; சம்பந்தப் பட்ட காவல் நிலையம் சென்று கைது செய்ததற்கான காரணம் அறியலாம். இவர்கள் சட்ட விரோதமாக நடந்து கொண்டால் நீதி கேட்டு நீதிமன்றம் செல்லலாம். ஆனால் க்யூ பிரிவு போலீசாரால் ஒருவர் கைது செய்யப் படுகிறார் என்றால் அவர் யாரால் கைது செய்யப் பட்டார், எங்கு கொண்டு செல்லப்பட்டார் போன்ற விவரங்கள் நமக்குத் தெரியாது. ஏனென்றால் க்யூ பிரிவு போலீசாருக்கு சீருடை கிடையாது; வெளிப்படையான அலுவலகம் கிடையாது. அனைத்தும் மறைமுகமாக நடைபெறுகிறது. இதனால் அரசியல் சட்டம் வழங்கியுள்ள ஒருசில உரிமைகள் கூட பயன்படாது. இது அடிப்படையில் மிகப் பெரிய மனித உரிமை மீறல் ஆகும். எனவே தான் க்யூ பிரிவு போலீசை சட்டவிரோத போலீசு என்கிறோம்', என்று டாக்டர் பாலகோபால் கூறிய க்யூ பிரிவு போலீசார் கட்டுப்பாட்டிலும் ஆயுதப்படை போலீசு பராமரிப்பிலும் 'அகதி முகாம்கள்' இருக்கின்றன என்றால் இதன் நிலையை எண்ணிப் பாருங்கள்.

### அகதி முகாமில் அவலங்கள்

அகதி முகாம்கள் போலீசின் கட்டுப்பாட்டில் உள்ளதால் ஏற்படும் அபாயத்தைப் பார்ப்போம்:

அ) மாதக்கடைசியில் தாங்கள் இத்தனை வழக்கு பதிவு செய்திருக்கிறோம் என உயர் அதிகாரிகளுக்கு கணக்கு காட்டுவதற்காக அருகில் இருக்கும் அகதி முகாம்களில் இருக்கும் அப்பாவி அகதிகளைப் பிடித்துச் சென்று பொய் வழக்கு போடுவதை தமிழக போலீசு வாடிக்கையாகக்

## இந்திய அரசே !

## ஈழத் தமிழர் மீதான கொடுமைகளை உடனே நிறுத்து!
## அகதிகளுக்கான அடிப்படை உரிமைகளை வழங்கு



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

## தமிழக மக்களே !

## ஈழத் தமிழர்கள் நம் இரத்தங்கள் ! அவர்கள் உரிமையைப் பாதுகாப்பது நம் கடமை!

கொண்டுள்ளது. இதனால் மாதக் கடைசி என்றால் தாங்கள் வெளியே சென்று வர ஒதுக்கப்பட்டுள்ள குறைந்த நேரத்தில்கூட அகதிகள் யாரும் வெளியே செல்ல அஞ்சுகிறார்கள்.

உ) வேலூர் சிறப்பு முகாமில் உள்ள ஐதர் மகாலில் காவலுக்கு நின்ற



www.tamilarangam.net

www.tamilarangam.net

ஒரு போலீசு காரர் கடந்த 10-03-1992 அன்று ஒரு பெண்ணை பாலியல் வன்முறைக்கு கட்டாயப்படுத்தினார். இதற்கு அப்பெண் மறுக்கவே அவர்மீது கஞ்சா வழக்கு போடப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டார். இது போன்ற அச்சுறுத்தலால் பெண்கள் பாலியல் இச்சைக்குக் கட்டுப்படும் அவல நிலை உள்ளது.

மணப்பாறை அகதி முகாமில் தங்கியுள்ள இளம் பெண் ஒருவரை அம்முகாம் பொறுப்பதிகாரியான தாசில்தார் அடிக்கடி அங்குள்ள லாட்ஜ்க்கு அழைத்துச் சென்று பாலியல் வன்முறை செய்வதுண்டு. இதைக் கண்டித்த 85 வயதுள்ள கந்தையா என்ற அகதியை விடுதலைப் புலி எனக் காரணம் காட்டி சிறப்பு முகாமில் அடைத்து கொடுமைப் படுத்தி உள்ளனர்.

மேலும், பொய் வழக்கு போடுவதாக மிரட்டி பணம் பெறுவது. பணம் கொடுக்க முடியாதவர்கள் மீது பொய் வழக்கு போடுவது போலீசின் அன்றாட நடவடிக்கை.

ஈழத் தமிழர்களுக்கு தமிழக அரசால் இழைக்கப்படும் கொடுமைகளில் மிகக் கொடுமையானதும், வெளியுலகிற்குத் தெரியாததும் சிறப்பு முகாம்களில் நடைபெறும் சம்பவங்கள் ஆகும். சிறப்பு முகாம்கள் என்ற பெயரிலான தமிழகத்தின் கிளைச்சிறைகளிலே நூற்றுக்கணக்கானவர்கள் அடைக்கப் பட்டுள்ளனர்.

## சிறப்பு முகாமின் சீர்கேடுகள்

சிறப்பு முகாம்களில் அடைத்து வைக்கப் பட்டிருப்போரின் வாழ் நிலைக்குச் சில எடுத்துக்காட்டுகள்:

O சிறப்பு முகாம்களில் பாதுகாப்பை காரணம் காட்டி 24மணிநேரமும் மிகக் குறுகிய அறைகளிலேயே அடைத்து வைக்கப் படுகின்றனர். நடமாடக் கூட முடியாத அச்சிறு அறைக்குள்ளேயே உண்ண வேண்டும், உறங்க வேண்டும், மலசலம் கழிக்க வேண்டும். காற்றோட்டம் அற்ற, சுகாதாரமற்ற இச்சிறு அறைகளுக்குள்ளே எந்தவித பொழுது போக்குமின்றி வைத்திருப்பது அவர்களை மனநோயாளிகளாக மாற்றும் முயற்சி எனவே கருத வேண்டியுள்ளது.

O சிறப்பு முகாமில் ஒரு அகதிக்கு ஒரு நாளைக்கு ரூ. 5/- வீதம் பணம் வழங்கப்படுகிறது. இதில் அரிசியைத் தவிர வேறு எந்தப்பொருளும் ரேஷனில் வழங்குவதில்லை. சமையலுக்கு விறகு அடுப்பு மட்டுமே அனுமதிக்கப் படுகிறது. ஒரு கட்டு விறகே ரூ. 3 க்கு விற்கும் பொழுது ரூ. 5 இல் அனைத்து பொருள்களும் வாங்கி எப்படி சமாளிக்க முடியும்? இதனைச் சுட்டிக்காட்டி 'பணத்தைக் கூட்டிக் கொடுங்கள், அல்லது ஏதாவது வேலை கொடுங்கள், அல்லது வெளியிலிருக்கும் உறவினர்களோடு தொடர்பு கொண்டு உதவி பெற அனுமதியுங்கள்', எனச் சம்பந்தப்பட்ட அகதிகள் கோரிக்கை விடுத்தனர். ஆனால் இவை எதையுமே அரசு ஏற்றுக் கொள்ளவில்லை. இதனால் விரக்தியடைந்து வேறு வழியின்றி தங்க வேலாயுதம் என்பவர் தம் மனைவியோடு தற்கொலை முயற்சியில் 10-4-93 அன்று ஈடுபட்டார். வேலூர் சிறப்பு முகாமில் உள்ள அதிகாரிகளுக்கு அப்போதும் இரக்கம் வரவில்லை.

O சிறப்பு முகாம்களின் உள்ளே மருத்துவவசதி எதுவும் கிடையாது. யாருக்காவது உடல்நிலை சரியில்லையாயின் வட்டாட்சியர், க்யூ பிரிவு அதிகாரிகளுக்கு மனு கொடுத்து அனுமதி பெற்று போலீசுக் காவலுடன் அரசு மருத்துவமனைக்குச் செல்ல வேண்டும். யாருக்காவது இரவிலோ திடீரெனவோ ஆபத்தான நிலை ஏற்பட்டால் உடன் மருத்துவம் பார்க்க எந்த வசதியும் கிடையாது. இதனால் வேலூர் சிறப்பு முகாமில் ஒரு சிறு குழந்தை இறக்க நேரிட்டது. தனியார் மருத்துவமனையிலும் சிகிச்சை பெற அனுமதி கிடையாது.

O சிறப்பு முகாம்களில் பொழுதுப் போக்கு வசதி எதுவும் கிடையாது. செய்தித்தாள், வார, மாத இதழ்கள், தொலைக்காட்சி, வானொலி எதுவுமே கிடையாது. அகதிகள் தம் சொந்த செலவில் வாங்க விரும்பினாலும் அதற்கும் அனுமதி கிடையாது. இதனால் அவர்களுக்கு வெளியுலக தொடர்பு துண்டிக்கப் பட்டுள்ளது.

O முகாமிலுள்ளவர்களைப் பார்ப்பதற்கு நெருங்கிய உறவினர்களை மட்டுமே அனுமதிக்கின்றனர் அவர்களும் தம் படம் ஒட்டிய விண்ணப்பத்தை வட்டாட்சியர் மற்றும் க்யூ பிரிவுக்கு அனுப்பி அனுமதி பெற வேண்டும். பார்க்க வரும் உறவினர்களிடம் நீண்ட விசாரணை நடத்தி திருப்தி ஏற்பட்ட பின்னரே பார்க்க அனுமதிப்பார்கள். இதனால் ஒரு முறை பார்க்க வருபவர் மீண்டும் வருவதற்கு அஞ்சுவர். தடாச் சிறையாளிகளையே யாரும் எளிதில் பார்க்கலாம் எனும் நிலை உள்ள போது சிறப்பு முகாமில் உள்ள அப்பாவி ஈழத் தமிழரைக் காண இத்தனை கெடுபிடிகள் என்பது எந்த வகையில் நியாயம் எனப் புரிந்து கொள்ள முடியவில்லை.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



O சிறப்பு முகாமில் உள்ள குடும்பத்தினரை பிரித்தே அடைத்து வைத்துள்ளனர் கணவன் மனைவி ஒருவரையொருவர் பார்த்துப் பேசுவதற்கே 15 நாள்களுக்கொருமுறைதான் அனுமதிக்கப் படுகிறது. வேலூர் முகாமில் இவ்வாறு பிரித்து வைக்கப்பட்ட 8 குடும்பங்கள் தங்களை ஒன்றாக வைக்கும்படி கோரி உண்ணாவிரதம் மேற்கொண்டும் இதுவரை எந்த நடவடிக்கையும் இல்லை.

O வேலூர் போன்ற சிறப்பு முகாம்களில் ஈழத்தில் நடந்த தாக்குதல்களின் போதும் சிங்கள இனவெறி காடையரின் போக்கிரித்தனத்தாலும் உடல் ஊனமுற்றவர்கள் பலர் உள்ளனர். தங்களை செஞ்சிலுவை சங்கம் வழியாக ஈழப் பகுதியில் உள்ள ஏதேனும் ஒரு செஞ்சிலுவை சங்கத்திடம் ஒப்படைக்குமாறு பலமுறை கோரியும் அரசு இதை பரிசீலனை கூட செய்யவில்லை.

குறிப்பாக துறையூர் சிறப்பு முகாமிலிருக்கும் சிவா, ரஞ்சன் இருவருமே விடுதலைப் புலிகள் என்ற சந்தேகத்தின் பேரில் கைது செய்யப் பட்டவர்கள். அங்கு இவர்களுக்கு போதிய உணவோ நீர் வசதியோ, மருத்துவ வசதியோ இல்லாத நிலையில் 24 மணி நேரமும் பூட்டியே வைக்கப் பட்டிருப்பார்கள். விசாரணை என்ற பேரில் போலீசு மிகக் கொடூரமாக மனிதாபிமானமற்ற முறையில் நடத்துகிறார்கள். இவர்கள் இருவரும் தங்களை செங்கல்பட்டு அல்லது வேலூர் சிறப்பு முகாமுக்கு மாற்றக் கோரி பலமுறை கேட்டும் எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை.

அதே போன்று தற்போது வேலூர் திப்பு மகாலில் உள்ள மாறன் என்பவர் தன்னோடு மருத்துவ சிகிச்சைபெறத் தமிழகம் வந்த சகோதரிகள் இருவரும் செங்கல்பட்டு சிறப்பு முகாமில் வைக்கப்பட்டிருக்கிறார்கள். அவர்களுக்கு உதவி செய்யும் பொருட்டும், பாதுகாப்பாக இருக்கும் பொருட்டும் செங்கல்பட்டு சிறப்பு முகாமிற்கு மாற்றம் கோரி சம்பந்தப் பட்ட அதிகாரிக்கு மனு கொடுத்தும் நடவடிக்கை இல்லை.

பொதுவாக சிறைச்சாலையிலேயே கொடுமைகள் அதிகம் என அனைவரும் அறிவர். ஆனால் சிறைச்சாலையில்கூட உணவு, சோப்பு எண்ணெய், அஞ்சல் அட்டை, சீயக்காய்த் தூள், உடை, போன்ற அடிப் படை வசதிகள் செய்யப்படுகின்றன. செய்தி அறிய தினமும் செய்தித் தாள், வார, மாத இதழ்கள், 15 நாள்களுக்கு ஒருமுறை திரைப்படம், தொலைக்காட்சி போன்றவை உண்டு. அதுமட்டுமல்லாமல் குறைந்த பட்சு மருத்துவ வசதி, வாரத்திற்கு ஒருமுறை மேலதிகாரிகளைப் பார்த்து தமக்கிழைக்கப்படும் கொடுமைகள் குறித்து நிவாரணம் கோரி சம்பந்தப்பட்டவர்கள் எவ்வளவோ மனுக்கள் அனுப்பியும், உண்ணா விரதம் போன்ற போராட்டங்கள் நடத்தியும் எவ்வித பயனும் கிடைக்க வில்லை. கடந்த 21-7-94 அன்று முதல் துறையூர் முகாமில் சாகும் வரை உண்ணா நோன்பு போராட்டத்தை நடத்தினர். இப்போராட்டத் திற்குப் பின் செய்தித்தாள் என்றப் பெயரில் துண்டு துண்டாக வெட்டப் பட்ட தாள்கள் வழங்கப்படுகின்றன. துறையூர் முகாமைத் தொடர்ந்து வேலூர், செங்கல்பட்டு, முகாம்களில் உண்ணா நோன்பும், புழல் முகாமில் தீக்குளித்துப் போராடியும் பயனில்லை.

இவ்வாறு ஈழத் தமிழ் அகதிகள் தமிழகத்தில் குற்றப்பரம்பரை யினராக வைக்கப்பட்டிருப்பது வேதனையிலும் வேதனை. தமிழகத்தில் உள்ள அரசியல் கட்சிகள் இந்த பிரச்சனை குறித்து எதுவும் பேசாமல் இருப்பது மறைமுகமாக அகதிகளின் மீதான ஒடுக்கு முறைக்கு துணை போவதாகவே அமையும்; அமைகிறது. அடிப்படை மனிதர்களாக கூட ஈழத் தமிழ் அகதிகள் நடத்தப்படுவதில்லை. இந்நிலையில், தமிழகத்தி லுள்ள பல்வேறு குழுக்கள், மனித உரிமை அமைப்புகள், பத்திரிக்கைத் துறை நண்பர்கள் இப்பிரச்சனைக் குறித்து கவனம் செலுத்துவது மிகவும் நம்பிக்கைக்குரியதாக உள்ளது.

தொடர்புக்கு :

*தமிழ். முகில்ன்*
*ஒருங்கிணைப்பாளர்*
*தமிழ்நாடு இளைஞர் பேரவை*
*63, தில்லையாடி வள்ளியம்மை நகர்,*
*திண்டிவனம்–604 002.*

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

குறை கூறலாம் என அடிப்படை உரிமைகள் உண்டு. ஆனால், சிறப்பு முகாம்களில் இந்த குறைந்தபட்ச உரிமை கூட கிடையாது. இவற்றை தம் சொந்த செலவில் பெற்றுக் கொள்ளலாம் என்றால் அதுவும் மறுக்கப் படுகிறது.

இவ்வாறான அடக்கு முறையினால் விரக்தியடைந்த அகதிகள் தங்களை திருப்பி தம் நாட்டிற்கே அனுப்பி வைக்கும்படி கேட்டுள்ளனர்.

தமது சொந்த செலவிலேயே நாடு திரும்ப தயாராக இருப்பதாகவும் அதற்கு அனுமதி அளிக்கும்படி தமிழக அரசை கேட்டுள்ளனர். ஆனால், அரசு செவிசாய்த்ததாக தெரியவில்லை.

சிறப்பு முகாம்களில் உள்ள ஒரு சிலர் மீது வழக்குகள் உள்ளன. இவர்கள் இவ்வழக்கில் நீதிமன்றத்தில் பிணையல் பெற்றும் இவர்கள் வெளியே விடப்படுவதில்லை. மாறாக சிறப்பு முகாம்களில் அடைக்கப் படுகின்றனர். இவர்களை நீதி மன்ற வழக்கிற்கு முறைப்படி அனுப்புவது கிடையாது. இதனால் மீண்டும் பிடி ஆணை போடப்பட்டு சிறைச் சாலைக்கே கொண்டு செல்கின்றனர். சிறப்பு முகாம்களின் அதிகாரிகளால் ஏற்படும் இத்தவறினால் அகதிகள் சிறையில் வாடுகின்றனர்.

உதாரணமாக, கொடைக்கானல் தொலைக்காட்சி நிலைய வெடி குண்டு வழக்கில் குற்றஞ்சாட்டப்பட்டு, கைது செய்யப்பட்டு மதுரை நடுவண் சிறையில் அடைக்கப்பட்ட பாலச்சந்திரன் என்பவருக்கு 20-6-92 அன்று உயர்நீதி மன்றம் பிணையல் வழங்கியது. ஆனால் இவரை விடுதலை செய்யாமல் வேலூர் சிறப்பு முகாமில் அடைத்து வைத்தனர். வேலூரிலிருந்து கொடைக்கானலுக்கு பல மணிநேரம் பட்டினியாக வழக்கு மன்றத்திற்கு அழைத்து வருவார்கள். ஒருமுறை முகாமிலிருந்து வழக்கு மன்றத்திற்கு அழைத்து வராமையால் பிடியாணை போடப்பட்டு மீண்டும் மதுரை சிறையில் அடைத்தனர். இவ்வாறு அடைக்கப்பட்டது தவறு என்றும் தம்மை பிணையலில் விடுவிக்க வேண்டும் அல்லது வழக்கு மன்றத்திற்கு அருகில் உள்ள முகாம் ஒன்றுக்கு மாற்றவேண்டும் என்றும் கேட்டு உயர்நீதி மன்றத்தில் போடப்பட்ட வழக்கின் அடிப்படையில் துறையூர் சிறப்பு முகாமில் கொடுந்துன்பத்திற்கிடையில் வைத்திருக்கிறார்கள். தளைப்படுத்தும்போது ''தமிழ் மக்கள் பாதுகாப்புப் பேரவை'' என்று சொன்ன போலீசு சிறப்பு முகாமில் வைப்பதற்கு காரணமாக அவர் ''விடுதலைப் புலி'' என்று புளுகுகிறது.



ஆழியர் நகர் அகதி முகாம், கோவை, தமிழ்நாடு





www.tamilarangam.net

www.tamilarangam.net

# நிலாக்கதையும் என் பாட்டியும்

தௌசிக் அகமது - எகிப்து
**தமிழில்: ஞானம்**

என் பாட்டி நிலவுப் பாட்டி அல்ல
சதா உரல் இடித்துக்கொண்டு மௌனமாய் இருக்க.

பூமியில் நடக்கும் அநியாயங்களைப் பார்த்துக்கொண்டு
மௌனித்திருக்கும் ஒற்றைக்கண் பூதம்
வெள்ளைப் பிசாசு நிலவைப் போல் வாழாதே -
பாரபட்சமின்றி சுட்டெரிக்கும் சூரியனைப் போல வாழ்ந்திடு!

நட்சத்திரக் கூட்டங்களைப் போல சேர்ந்திரு
திசைகளைப் போலப் பிரிந்திருக்காதே!
என் பாட்டி இரவுப் படுக்கையின்போது சொன்னது.

சூரியனை மையமாக வைத்து கிரகங்கள் சுழல்வதுபோல,
யதார்த்தத்தை மையமாக வைத்து இயங்கு!
தருணம் பார்த்து குமுறும் எரிமலை போல,
சூழ்நிலைக் கணியும்போது குமுறிவிடு!



பூமியைக் குளிரவைக்கும் மழைபோல,
உன்னைச் சுற்றியவர்களை குளிர்விக்கத் தெரிந்துகொள்!

நதியைப் போல நிதானமும்,
புயலைப் போல செயலும்,
மரம் போல உதவியும்...
இன்னும் என்னென்னவோ சொன்னாள்.

என் பாட்டி விசித்திரமானவள்... வித்தியாசமானவளும்கூட...

பாவம்
பாட்டி ஒரு வைத்தியம்,
நான் 'உம்' [illegible]
தூக்கத்திற்காக என்பது அவளுக்குத் தெரிந்திருக்குமோ?
மனிதவாழ்வு [illegible] அர்த்தம் தெரிந்தவளாயிற்றே!

SP

www.tamilarangam.net

# அவள்



அவள்.
நன்றாக நினைவு படுத்திட்
பார்த்தான்.
அவள்,
அவள் தான்.
அதே புருவ வெட்டு, சுருள் சுருளான
நீளமாய் வளர்ந்த கூந்தல்..... வேறு
யாருக்கு இருக்கும். புத்தகக்
கட்டுடன் போய் வந்து
கொண்டிருந்த அவளையும் அந்தத்
தெருவையும் மறக்க முடியுமா?
அவளே தான்.
பிரிந்தும் பிரியாமலும்
புன்னகைக்கும் அழகு..... தோடு
கூடக் குலுங்கி ஏதோ சொல்லும்.....
அழகி என்று சொல்ல
முடியாவிட்டாலும் கவர்ச்சி தான்.
நன்றாக ஞாபகத்தில் இருக்கிறது.
டியூசனுக்குப் போய் வந்த அவளை
வளைத்துப் போடப் பட்டபாடு...
எத்தனை நாள் தூங்காமல்...
எத்தனை சிகரட்டுகளை
வீணாக்கி... ஒரு நாள்
சம்மதித்தாள்...
மாமா எங்கள் வீட்டை திறப்பைக்
கொடுத்து, வீட்டைப் பார்த்துக்

-முல்லை அமுதன்.-

www.tamilarangam.net

*கொள்ளுங்கள் என்று வெளிநாடு போயிருந்தது வாய்த்து விட்டது. நண்பர்கள் டாக்ஸி ஏற்பாடு செய்தார்கள். பயந்து பயந்து அவளைக் கொண்டு வந்து வீட்டுக்குள் நுழையும் வரை.... உள் நுளைந்ததும்... நிலவில் கால் வைத்து விட்ட சந்தோஷம்... துருதுருப்பு... அவள் பயந்த மாதிரி இருந்தாள்.*

*நண்பன் ஜனதாவில் இருந்து கொத்து ரொட்டி.... ஒரேஞ்ச் பார்லி எனக் கொண்டு வந்திருந்தான். சாப்பாடாயிற்று... அவளுக்கு விக்கல் எடுத்தது... தண்ணீர் வேண்டுமே. கிணற்றடிக்குப் போனால் பின் வீட்டு மாமியின் கண்ணில் பட்டால்... எல்லாமே பிரச்சனையாகிவிடும்.*

*மூச்சைப் பிடித்தபடி சோடாவைக் குடி என்றதும் தயங்கித் தயங்கிக் குடித்தாள்.*

*எனக்குள் தவிப்பு... நான் தான் முதலில்.ஆனாலும் அது கிடைக்கவில்லை... நண்பர்கள் முந்திக் கொண்டனர்.*

*"பெண்கள் பலசாலிகள்... எப்படித் தாங்கிக் கொள்கிறாள்?"*

*"போடா... தத்துவம் பேசுற நேரமே!" நண்பன் துரிதப் படுத்தினான். தயக்கம் வந்துவிட்டது இப்போது.*

*"பாவம்டா... வேண்டாம்... அவளைக் கொண்டு போய் விட்டுடடா" கெஞ்சினேன்.*

*"உவன் இப்பிடித்தான். கடைசி நேரத்தில காலை வாரி விடுவான்... ஏன்ரா முதலில் தரேல்ல எண்டு நினைக்கிறியே?"*

*"ச்சீ... எனக்கு ஏனோ சரியில்லை எண்டு படுது."*

*முதலில் இருந்த துறுதுறுப்பு இப்ப இல்லை. எழுந்தேன்.*

*அவள் என்னை ஒரு மாதிரிப் பார்த்தபடி... உடைகளை ஒவ்வொன்றாக எடுத்தாள் அணிவதற்கு.*

*நான் தலை குனிந்தபடி நின்றிருந்தேன். அவள் பார்த்த பார்வை... நன்றாக ஞாபகமிருக்கிறது.*

*இத்தனை வருடத்திற்குப் பிறகும்... அதே அழகுடன் நடந்து வருபவளை... வெளிநாட்டிலிருந்து வந்திருக்கும் எனக்கு நினைவிருப்பது போல அவளுக்கும் நினைவிருக்குமா?*

*இப்போதும் உள்ளுக்குள் உறுத்தியது. குருதி வடிந்தது.*

*அவளின் இந்த நிலைக்கு யார் காரணம்? படித்துப் பட்டம் பெற்றிருக்கலாம். திருமணமாகி செட்டில் ஆகியிருக்கலாம். மாறாகத்... திசை மாற வைத்தது யார்?*

*கண்கள் பனித்தன... மனைவி "வாங்க போவம்! என்ன விடுப்புப் பாக்கிறியள்... அவள் ஊரறிந்த வேசை..."*

*நானும் நடந்தேன்..*

(யாவும் கற்பனையே)

---

## நோர்வேப் புகை!

நோர்வேயில் சிகரெட்டின் விலை ஏனைய நாடுகளைவிட மிக அதகம். ஆனால், அது நோர்வேஜியர்களைப் புகைத்தலில் இருந்து தடுக்கவில்லை. மொத்த சனத் தொகையில் 35%இனர் தினசரி புகைத்தலில் ஈடுபடுகின்றனர். அயல் நாடுகளான சுவீடன், பின்லாந்தில் இது வெறும் 24% மட்டும்தான். 7500 நோர்வேஜியர்கள் வருடாந்தம் புகைத்தலால் உயிரிழக்கிறார்கள். இவர்களில் பாதிப்பேர் இளம் வயதிலேயே மரணத்தைத் தழுவிவிடுவர். பெண்களில் 72%இனரும், ஆண்களில் 52%இனரும் புகைபிடிப்போரின் அருகே தாம் நிற்க விரும்புவதில்லை எனக் கூறுகின்றனர். அமெரிக்க ஆய்வொன்று புகைத்தலால் ஆண்மைக்குறைவு ஏற்படலாம் எனக் கூறுகிறது.

மனு

www.tamilarangam.net



# பாலஸ்தீனம்
# ஒரு நீறு பூத்த நெருப்பு.



(முன்தொடர்)

பாலஸ்தீனத்தில் தொடர்ச்சியாக இடம் பெற்ற படையெடுப்புக்களால் பாலஸ்தீனத்தை விட்டு வெளியேறிய யூதர்கள் அயல்நாடுகளான ஒரு சில மத்திய கிழக்கு நாடுகளிற்கும் ஐரோப்பிய மற்றும் அமெரிக்க நாடுகளிற்கும் குடிபெயர்ந்தனர். இந்நாடுகளில் குடியேறிய யூதர்கள் வியாபாரங்கள் செய்வதிலும் வட்டிக்குப் பணம் கொடுத்து கந்து வட்டித் தொழிலிலும் மேலோங்கி விளங்கினர். குடிபெயர்ந்து வாழ்ந்த நாடுகளிலுள்ள சமூக மக்களுடன் ஒட்டாமல் தமது மதக் கோட்பாடுகளின் படி தனித்த குடியிருப்புப் பகுதிகளில் வாழ்ந்து வந்தனர். இவர்களது உணவு, உடை, கலாச்சாரம் என்பன குடிபெயர்ந்த நாடுகளிலுள்ள மக்களிடமிருந்து அந்நியப்பட்டு இருந்தமையால் யூதர்கள் மேல் ஒருவித வெறுப்புணர்வை யூதர்கள் குடியேறிய நாட்டு மக்கள் கொண்டிருந்தனர். பல ஐரோப்பிய நாடுகளில் யூதர்கள் மீதான கட்டுப்பாடுகள் வலிமைப்படுத்தப்பட்டு இருந்தது. நோர்வே நாட்டின் அரசியல் யாப்பிலேயே யூதர்கள் மீதான தடைவிதி காணப்படுகிறது.( இச்சட்டவிதி இப்போது நடைமுறையில் இல்லை.)

யூதர்கள் பல நாடுகளிற்குத் துரத்தியடிக்கப்பட்டாலும் குடிபெயர்ந்த யூதர்கள் மத்தியிலோ அல்லது பல நாடுகளிலும் சிதறுண்டு வாழ்ந்த யூதர்களிடையேயோ எத்தகை அமைப்பு ரீதியான தொடர்புகளோ உறவுகளோ இன்றிச் சுயமாகவே இயங்கி வந்தனர். எனினும் 19ம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் ஐரோப்பிய நாடுகளில் எழுச்சிபெற்ற தேசிய இனக் கோட்பாடும் அதனூடாக எழுச்சிபெற்ற தேசிய இனங்களின் சுயாதீனமும் யூதர்கள் மத்தியிலும் சிறுதாக்கத்தைத் தோற்றுவித்தது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இதன் விளைவாக யூத சீர்திருத்தக் குழு, யூத அறிவொளி இயக்கம் என்பன தோற்றம் பெற்றன. ஐரோப்பாவிலும் ஏனைய நாடுகளிலும் வாழும் யூதசமூகங்கள் சமூக பொருளாதார வேறுபாடுகளின்றி ஒன்றிணைந்து செயற்பட வேண்டுமென இக்குழுக்கள் கோரிய போதும், பல்வேறு சமூகங்களைச் சேர்ந்த யூதர்களை சமூக பொருளாதார வேறுபாடின்றி ஒன்றிணைப்பதைப் பழமைவாத யூதர்கள் முற்றாக எதிர்த்தார்கள்.

1861ல் ஜேர்மனிய யூதரான ஹெர்ஷ் களிஷர் (Herz Calizer) என்பவர் ஜெருசலத்தைத் தேடி ( The search for zilon) எனும் நூலை எழுதினார். இந்நூலில் அவர் முக்கியமாகக் கூற வந்த விடயம் யாதெனில் ஐரோப்பாவில் யூதர்களுக் கொதிராக வலுவடைந்து வரும் இனக்குரோதத்தையும் ஒடுக்கு முறைகளையும் தீர்க்கும் முகமாக யூதர்கள் பாலஸ்தீனத்தில் குடியேற வேண்டுமென அவர் அறைகூவல் விடுத்தார். இதன் மூலம் யூதர்களின் அடிப்படைப் பிரச்சனைகளிற்குக் குறைந்த பட்சத் தீர்வையேனும் காணமுடியும் என வலியுறுத்தினார். இவரின் முயற்சிக்கு யூதர்கள் மத்தியிலிருந்தே எதிர்ப்பு ஏற்பட்ட போதும் ஜேர்மனியில் முதன் முதலாக யூத அமைப்பு ஒன்று இவராலேயே தோற்றம் பெற்றது.

1862ல் மோஸஸ் ஹெஸ் ( Moses Hess) என்பவர் ரோமும் ஜெருசலமும் என்ற நூலை வெளியிட்டார். இந்நூலில் யூத அறிவொளி இயக்கத்தைக் கடுமையாக விமர்சித்த இவர் ஐரோப்பாவில் புலம் பெயர்ந்து வாழும் யூதர்கள் ஐரோப்பிய சமூக கலாச்சார மாற்றத்தால் தங்களின் தனித்துவத்தையும் மதக் கோட்பாடுகளையும் இழக்கின்றனர் எனக் கூறியதுடன், யூதர்கள் பாலஸ்தீனத்தில் குடியேறுவதன் மூலமே யூதர்களின் தனித்துவத்தையும் பாலஸ்தீனத்தில் சமூகப் பெருளாதார அரசியல் மாற்றங்களையும் ஏற்படுத்தக் கூடியதாய் இருக்கும் எனக் கூறினார். இவரது முயற்சியின் காரணமாகவே செல்வந்த யூதர்கள் பலர் ஒன்று சேர்ந்து ஜெருசலத்தை நேசிப்பவர்கள் என்ற அமைப்பை உருவாக்கினார்கள். இக்குழுவிற்கு ரூத்சைல்ட் (Rothchild) என்ற யூத முதலாழித்துவக் குடும்பங்கள் சகல உதவிகளையும் செய்து வந்தனர். இவர்கள் பாலஸ்தீனத்தில் யூதர்களைக் குடியேற்றுவதில் தீவிர கவனம் செலுத்தி வந்தனர்.

குடிபெயர்ந்து வாழ்ந்த நாடுகளிலுள்ள சமூக மக்களுடன் ஒட்டாமல் தமது மதக் கோட்பாடுகளின் படி தனித்த குடியிருப்புப் பகுதிகளில் வாழ்ந்து வந்தனர். இவர்களது உணவு, உடை, கலாச்சாரம் என்பன குடிபெயர்ந்த நாடுகளிலுள்ள மக்களிடமிருந்து அந்நியப்பட்டு இருந்தமையால் யூதர்கள் மேல் ஒருவித வெறுப்புணர்வை யூதர்கள் குடியேறிய நாட்டு மக்கள் கொண்டிருந்தனர்.

ஐரோப்பாவில் தோன்றிய யூத அமைப்புக்கள் பலவும் யூதர்களைப் பாலஸ்தீனத்தில் குடியமர்த்துவதில் மிகவும் சிரத்தையுடன் செயலாற்றின. இதன் விளைவாக 1882இல் பாலஸ்தீனத்தில் இருந்த தொகையுடன் ஒப்பிடுகையில் 1990களில் சமார் 100%க்கு மேற்பட்ட அதிகரிப்பு ஏற்பட்டது. பாலஸ்தீனத்தில் குடியேறியவர்கள் எய்ன்ரார்ரா ( Einrarra) மிலாபெஸ்(Mlabess) ஆகிய இரு கிராமங்களிலும் தங்களது குடியிருப்புக்களை ஏற்படுத்தினர். 1882 அளவில் லியோ பின்ஸ்கர் ( Lio Pinsker) எனபவர் யூதர்களின் பிரச்சனைக்குத் தனி நாடுதான் தீர்வு என்ற அடிப்படையில் சுயமாக விடுவித்துக் கொள்வது என்ற தலைப்பில் ஒரு பிரசுரத்தை வெளியிட்டார். சில ஆண்டுகள் கழித்து இவர் ஜெருசலேத்தை நேசிப்பவர்கள் குழுவில் தலைவரானதும் நவீன யூத வாதம் (moden zionism) என்னும் புதிய



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

கோட்பாட்டை ஆரம்பித்து வைத்தார்.
1896 தியோடோ ஹெர்ஸ் (Theodo Herz) என்பவர் யூத நாடு என்னும் நூலை எழுதினார். யூதர்களின் தனித்துவம் நிலைநாட்டப்படுவதாலோ அல்லது ஐரோப்பிய கலாச்சார சமூக விழுமியங்களை உள்வாங்குவதாலோ தங்களது பிரச்சனைகளிற்குத் தீர்வு காண முடியாது என்றும் யூதர்களுக்கு என்று ஒரு நாட்டை ஏற்படுத்துவதன் மூலமே யூதர்கள் புலம் பெயர்ந்த நாடுகளில் எதிர்நோக்கும் பிரச்சனைகளிற்குத் தீர்வு காணமுடியும் எனக் கூறினார். எனினும் அத்தகைய யூத நாடு எங்கு அமைய வேண்டுமெனத் தியோடோ கூறவில்லை. இதனால் இவரின் கருத்துகளிற்கு யூதர்களின் மத்தியில் செல்வாக்கில்லாமல் போனதைக் கண்ட தியோடோ 1897இல் அதன் இலக்குப் பாலஸ்தீனம் என்று அறிவித்தார். இதேயாண்டு ஆவணி மாதம் 27ம் திகதி முதலாவது யூதமகாநாட்டை தியோடோ ஆரம்பித்து வைத்தார். யூத மக்கள் மத்தியில் உத்வேகத்தையும் சுதந்திர உணர்வையும் தட்டி எழுப்பிய இம்மகாநாட்டில் மொத்தம் 204 பிரதிநிதிகள் கலந்து கொண்டனர். இதன் மூலம் யூதர்கள் ஒரு பொது ஸ்தாபன அமைப்பை ஏற்படுத்திக் கொண்டனர்.
யூத விவசாயிகளையும் தொழிலாழிகளையும் பாலஸ்தீனத்தில் குடியேற்றல், சிதறுண்டு வாழும் யூதர்களை ஒன்றிணைக்கும் முயற்சியாக அவர்கள் வாழும் நாடுகளில் யூத அமைப்புக்களை ஏற்படுத்தல் யூதர்களின் தனித்துவத்தைப் பாதுகாத்தல் உட்பட யூத அடிப்படைவாதம் வெற்றி பெறப் புலம் பெயர்ந்து வாழும் நாடுகளிலுள்ள அரசுகளின் ஆதரவைப் பெறும் முயற்சியில் ஈடுபடல் போன்ற கோரிக்கைகள் இக்கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டன. இந்நோக்கங்களை நிறைவேற்றும் பொருட்டு யூதர்களின் தேசிய நிதி, பாலஸ்தீன குடியேற்ற நிதி என்பன நடைமுறைப் படுத்தப்பட்டது. பாலஸ்தீன நாட்டை யூத நாடாக மாற்றும் செயல்களும் படிப்படியாக இடம்பெற்றது.

( தொடரும் )

## நோர்வே பெண்கள்

உயர்கல்லூரிகளிலும், பல்கலைக் கழகங்களிலும் பயில்வோரின் எண்ணிக்கையில் 60சதவீதம் பெண்கள். மேலதிகப் பட்டப் படிப்பு முடிப்பவர்களில் 40 சதவீதமானோர் பெண்கள். ஆய்வாளர்களில் 24 சதவீதமானோர் மாத்திரமே பெண்கள்.
வீட்டு வேலைகளில் பெருமளவைப் பெண்களே செய்கின்றனர். ஒரு ஆண் சராசரியாக 2 மணித்தியாலங்கள் 36 நிமிடங்கள் வீட்டு வேலைகளைச் செய்கையில், ஒரு பெண் சராசரியாக 4 மணித்தியாலம் 22 நிமிடம் வீட்டு வேலைகளில் ஈடுபடுகிறாள்.
ஒரே வேலையைச் செய்யும் ஆண்களும், பெண்களும் வேறுபட்ட சம்பளத்தைப் பெறுவது பல இடங்களில் நடைமுறையில் உள்ளது. உற்பத்தித் தொழிற் துறையில் ஆணின் சம்பளத்தின் 85% மட்டுமே பெண்ணால் பெறப்படுகிறது. வியாபார நிறுவனங்களில் உயர்பதவிகளில் உள்ள பெண்கள், அதே வகைப் பதவியில் உள்ள ஆண்களின் சம்பளத்தில் 87%ஐயே பெறுகின்றனர்.

மாது

www.tamilarangam.net

# கூடுகளுக்குள் ஒரு கூடு

அ.ஜ.கான்,
ரியாத்

நான் பொஸ்னியன்
நான் குரோஷியன்
நான் செர்பியன்
இல்லையில்லை நான் அகதி.
நான் யார்?

மேகச் சூரியனாய் வந்துபோகும் நினைவுகளுடன்
மனிதம் இழந்து திரியும் சதைக்கூடுகளா?

ஏதாவதொரு அடையாள அட்டை விழுமென
என் கபாலக்கூட்டைத் திறந்துவைத்து
எல்லை வாசலருகே காத்திருந்தேன்.

எனக்கான உணவு
எனக்கான இடம்
எனக்கான உரிமை
எங்கே என்று கேட்டபொழுது
நான் நாடு கடத்தப்பட்டேன்.

குறிகளின் ஆதிக்கமில்லா இப்பிரதேசம்
வந்தேகி சில நாட்கள்தான் ஆகிறது
யாரும் என்னிடம் எதுவும் கேட்கவில்லை
ஆனால், என்னை மனிதன் என்றுமட்டும் ஏற்றுக்கொண்டார்கள்.
எனக்குத் தெரிந்துபோயிற்று
அடையாள அட்டைகளால் மனிதத்தை மீட்கமுடியாது என்று.
அதனால்தான் வரும்போதே கடலுக்குள் வீசியெறிந்துவிட்டேன்.

இப்போது என்னிடம் இருப்பது
தலை,
வாய்,
இரண்டு கைகள்,
இரண்டு கால்கள்.

முகமா?
அதைத்தான் கடலுக்குள் வீசியெறிந்துவிட்டேனே!
இப்போது என் பெயர் அகதியாம்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

**இம்முறை ஊர்வலம் பகுதியில் ஒரு ஊர்வலம் பற்றி எழுத வேண்டி ஆயிற்று.**

# ஊர்வலம்

அதிவேகன்

முன்னர் அடிக்கடி இபபகுதி எழுதவேண்டி இருந்தது. இம்முறை ஊர்வலம் பகுதியில் ஒரு ஊர்வலம் பற்றி எழுத வேண்டி ஆயிற்று.

அண்மையில், அதாவது போர்த் தவிர்ப்பு ஒப்பந்தம் மீறப்பட்ட சில நாட்களில், ஒரு தகவல் பரவி இருந்தது. விடுதலைப் புலிகளின் வெளிநாட்டுக் கிளைகளுக்கு மேலிடத்தில் இருந்து வந்த தகவலில் இம்முறை ஊர்வலத்தை எல்லா அமைப்புகளையும் இணைத்துச் செய்ய வேண்டும் என்று கூறப்பட்டதாக அந்தச் செய்தி இருந்தது.

இந்தச் செய்தி எந்தளவு உண்மையோ பொய்யோ, அதில் உண்மை இருப்பதாகவே இங்குள்ள கிளையின் நடவடிக்கைகளில் தெரிந்தது. யூன் முற்பகுதியில் ஒஸ்லோவில் பல அமைப்புகள் அழைக்கப் பட்டன; சில தவிர்க்கப் பட்டுத்தான். விளையாட்டுக் கழகங்கள்கூட அழைக்கப்பட்டு ஊர்வலத்தின் அவசியம் பற்றி வலியுறுத்தப் பட்டது.

இது இவ்வாறிருக்க 1990ல் பிரேமதாசா - புலிகள் முடிந்து யுத்தம் ஆரம்பித்தபோது, ஒஸ்லோவில் யுத்தத்தை எதிர்த்து ஊர்வலம் ஒன்றை நடத்தத் தமிழ் நோர்வே மக்கள் இணைவுகூடத்தினர் முன்வந்தனர். இதன் முன்னோடி நடவடிக்கையாக இங்குள்ள பல அமைப்புகளையும் அழைத்து ஒரு பொதுவான ஊர்வலம் வைக்க முயன்றனர். இங்குள்ள மக்கள் வெவ்வேறு ஸ்தாபனங்களின் அடிப்படையில் இணைந்திருப்பதைச் சுட்டி, இங்குள்ள அமைப்புகளின் பெயரில் இணைந்த ஊர்வலம் என்ற கோரிக்கையை முன்வைத்தது இணைவுகூடம். இது அனைவரும் இணைந்தே ஊர்வலத்தை நடத்துவதை உறுதி செய்வதுடன் இலங்கை அரசின் இனவாத முகத்திரையைக் கிழிக்கும் எனக் கூறப்பட்டது.

இதில் தமிழர் ஒருங்கிணைப்புக் குழுவினர் தமது இயக்கப் பதாகை ஏந்தியே இதில் கலந்துகொள்ளலாம் எனக் கூறியது ஒரு தடை போலாயிற்று. ஈழத்தில் விடுதலைப் புலிகளே



www.tamilarangam.net

யுத்தத்தை ஆரம்பித்தார்கள் என்பதால் இங்கு அதே பெயரில் யுத்தத்தை எதிர்த்த ஊர்வலம் வைப்பது சரியல்ல என்ற கருத்து முன்வைக்கப் பட்டது. அக் கருத்து ஏற்கப்படவில்லை.

இறுதியில் ஒற்றுமையான, காத்திரமான முன்னெடுப்பு கைவிடப்பட்டது. முதலில் ஊர்வலத்தில் கலந்துகொள்ள உடன்பட்ட தமிழ்ச் சங்கமும் பின்பு, பின்வாங்கிவிட்டது.

ஐந்து வருடங்களின் பின்பும், மூன்றாவது ஈழப் போரை விடுதலைப் புலிகளே போரை ஆரம்பித்த நிலையில், தமிழர் ஒருங்கிணைப்புக் குழு இங்குள்ள அமைப்புகளில் சிலவற்றை மட்டும் அழைத்துத் தமது நோக்கம் பற்றித் தெரியப்படுத்தித், தமது (விடுதலைப் புலிகளது) பதாகையின் கீழேயே வரவேண்டும் என்ற கோரிக்கையையும் தெளிவாக முன்வைத்தனர்.

இதில் தமிழ்ச் சங்கம் உடனடியாகத் தாம் ஒத்துழைப்பதாகக் கூறியது. (ஆனால், நோர்வேத் தமிழர்களது இங்குள்ள பிரச்சனைகளைக் கையாள மூவர் குழுவினால் முன்னெடுக்கப்பட்ட, எல்லா அமைப்புகளையும் இணைத்த நிரந்தர அமைப்பு ஒன்று உருவாக்குவது என்ற கோரிக்கைக்கு மூன்று மாதங்கள் இழுத்தடித்துட் பொதுச்சபையைக் கேட்டே முடிவு எடுக்க வேண்டும் என்று கூறிய தமிழ்ச் சங்கம் இதில் மூன்றே நிமிடத்தில் முடிவு எடுத்தது)

இது பற்றிப் பல விமர்சனங்கள் வெளியே கேட்கக் கூடியதாக இருந்தன. விடுதலைப் புலிகளே மீண்டும் யுத்தத்தை ஆரம்பித்ததால், அவர்களே யுத்தத்தை எதிர்த்து ஊர்வலம் நடத்துவது எத்தகு தாக்கத்தை நோர்வேஜிய மட்டத்தில் கொண்டு வரும் எனச் சிலர் கேள்வி எழுப்பினர். (இந்த ஊர்வலம் பற்றிப் பத்திரிகைகள் அலட்டிக் கொள்ளவில்லை.) இதேவேளை இங்குள்ள பொது அமைப்புகளின் பெயரால் நடாத்தப் பட்டிருப்பின், அது இங்குள்ள மக்களின் உண்மையான குரலாக உணரப் பட்டிருக்கும்; சிறிலங்கா அரசின் முகத்திரையைக் கிழிக்கப் பயன்பட்டிருக்கும் என அரசியல் அவதானி ஒருவர் கருத்துத் தெரிவித்தார். இது ஒரு ராஜதந்திர நகர்வாக இருந்திருக்கும் என்றும் அவர் கூறினார்.

அண்மைக் காலங்களில் சந்திரிகா அரசு தொடர்பாக வெளிநாடுகளில் நல்லெண்ணப் பரவியுள்ளதை மறுக்க இயலாது. விடுதலைப் புலிகளுக்குப் போரைத் தொடங்கியவர்கள் என்ற பெயரே ஒவ்வொரு செய்தியிலும் முதன்மை கொடுத்துப் பிரசாரம் செய்யப் படுவதும் யாவரும் அறிந்ததே. இந்நிலையில் இயக்க அரசியலைவிட ராஜதந்திர ரீதியான சில நடவடிக்கைகளை விடுதலைப் புலிகள் மேற்கொள்வது புத்திசாலித் தனமானது என அந்த அரசியல் அவதானி மேலும் தெரிவித்தார்.

## சொன்னால்....

நோர்வே நாட்டு அரசியல்வாதி ஒருவர் தனக்கு நெருங்கியவர்களிடம் கூறியதாகக் காதில் விழுந்த செய்தி இது.

இலங்கைக்கு அண்மையில் சென்றிருந்த அந்த நோர்வேஜிய அரசியல்வாதி, கூட்டணிப் பாராளுமன்ற உறுப்பினர் நீலன் திருச்செல்வத்தைச் சந்தித்தார். அப்போது, கொழும்பு தமிழர்களுக்குப் பாதுகாப்பா என்று நீலனிடம் கேட்டார் நோர்வே அரசியல்வாதி.

அதற்கு நீலனின் பதில் இப்படி இருந்ததாம்: கொழும்பில் தமிழர்களுக்குப் பாதுகாப்பு இல்லை என்று எப்படிச் சொல்வது? இங்கு இரண்டரை லட்சம் தமிழர்கள் வாழ்கிறார்களே

ஏசியில் ஏசி அறைக்குள் வாழ்ந்தபடி, இதுதான் பிரச்சனைக்குத் தீர்வு என்று எதையோ எழுதிக் கொடுத்துவிட்டு அரசுடன் கொஞ்சிக் குலாவும் அரசியல்வாதிகளுக்குப் பாதுகாப்பாகக் கொழும்பு தெரியலாம். அடுத்த நிமிடம் என்ன நடக்கும் என்று தெரியாமல், வசதிகளற்ற லொட்ஜ் அறைகளில் அடைபட்டுக் கிடக்கும் தமிழ் இளைஞர்கள், யுவதிகள் ஆயிரமாயிரப் பேருக்கு?

இனந்தெரியாதோரால் கடத்தப்பட்டுப் பிணமாக வாவிகளில் வீசப்பட்டோர் தமிழர்கள்தான் என்பதைச் சிங்களப் பத்திரிகைகளே வெளியிடுகின்றன என்பதை நீலனைக் காணும் தமிழர்கள் யாராவது சொன்னால் நல்லது.

www.tamilarangam.net

மனு

# இலங்கைக்கு வந்த நோர்வேஜியர்

இலங்கைக்கும் நோர்வேக்கும் இடையிலான தொடர்பு முக்கியமாக உதவி வழங்கும் நாடு - உதவி பெறும் நாடு என்ற அடிப்படையிலேயே அமைந்தது. அதேவேளை இலங்கைக்கு மனிதாபிமான ரீதியிலான உதவிகளை வழங்குவதில் மட்டுமன்றி வேறு வழிகளிலும் நோர்வேயும், நோர்வேஜியர்களும் தொடர்பு கொண்டுள்ளனர். இலங்கை இனப்பிரச்சனையில் அதிக அக்கறை காட்டும் நாடுகளில் ஒன்றாகவும் நோர்வே உள்ளது. அண்மைக் காலங்களில் நடைமுறையில் இருந்த போர்த் தவிர்ப்பு ஒப்பந்தத்திற்கும் நோர்வேஜியர் ஒருவர் அவதானியாக இருந்துள்ளார். மிக அண்மையில் ஐக்கிய நாடுகள் அபிவிருத்தித் திட்டத்தின் இலங்கைக்கான பிரிவுக்கும், அங்குள்ள ஏனைய ஐ.நா. அமைப்புகளுக்கும் தலைவராகவும் ஒரு நோர்வே ராஜதந்திரி பதவியேற்றுள்ளார். (ஐ.நா. அபிவிருத்திப் பிரிவின் இலங்கைக்கான பிரிவினது வருடாந்தச் செலவுகள் நாற்பதுகோடி இலங்கை ரூபாய்கள் ஆகும். ஐ.நா.வின் வெவ்வேறு பிரிவுகளில் நூற்றுக்கு மேற்பட்டோர் பணியாற்றுகின்றனர்) ஆர்வ ஒப்ஸ்ரா ( Arve Ofstad ) என்ற பெயரை உடைய இவருக்கு வயது 47. ஒஸ்லோவை அடுத்துள்ள பாரும் (Baerum ) பகுதியைச் சேர்ந்தவர் இவர்.

தந்தை ஐ.நா.வில் பணிபுரிந்தபோது, சிறு வயதிலேயே கென்யா, எதியோப்பியா போன்ற நாடுகளில் வசித்துள்ள ஒப்ஸ்ரா மொஸாம்பிக், நமீபியா, பொட்ஸ்வானா, இந்தியா ஆகிய நாடுகளில் ஏற்கனவே பணிபுரிந்துள்ளார். முன்பே ஒரு தடவை இலங்கைக்கு வருகை தந்து, அங்கு ஒருவாரம் தங்கியிருந்த ஒப்ஸ்ரா, இலங்கையில் உள்ள சிக்கலான சூழலில் தன்னால் நிதானமாகப் பணிபுரிய முடியும் என நம்புகிறார். அபிவிருத்திக்காக உதவி வழங்கும் அமைச்சில் உயர்மட்ட ஆலோசகராகப் பணிபுரிந்த இவரது பணியில் இலங்கையின் வடபகுதிக்கும் செல்ல நேரிடக்கூடும். அவ்வாறு செல்ல நேர்ந்தால் தான் தமிழர்களது ( விடுதலைப் புலிகளது ) அனுமதியுடனேயே செல்வேன் என்கிறார் இந்த அதிகாரி.





தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

மனு

# வீழ்ச்சியுறும் சிறுவர் நூல்கள்
# வளர்ச்சியுறும் வீடியோ விளையாட்டுகள்

நோர்வேயில் பொதுவாகச் சிறுவர் நூல்கள் மிக அதிகளவில் விற்பனையாவன. நோர்வே மொழியில் எழுதப்பட்ட நூல்கள் மாத்திரமன்றி ஏனைய பல மொழி நூல்களும் இங்கு மொழிபெயர்ப்புச் செய்யப்பட்டு வாசிக்கப் படுகின்றன. ஆனால் கடந்த வருடம் சிறுவர் நூல்களின் ( Barneboker ) விற்பனை கணிசமான அளவு வீழ்ச்சி அடைந்துள்ளது.

நூல் விலையின் அடிப்படையில் முந்திய வருடத்தைவிட 1994ல் நூல்கள் எட்டு வீதம் அதிகம் (230கோடி குறோணர்கள் பெறுமதியான நூல்கள்) தயாரிக்கப் பட்டன. கடந்த வருடம் ஒரு கோடியே 68லட்சம் நூல்கள் விற்பனை செய்யப்பட்டன. பாடசாலை நூல்கள் முந்திய ஆண்டுகளைவிட அதிகம் விற்பனை ஆகியுள்ளன. (இதற்கு முக்கிய காரணம் புதிய கல்வித் திட்டம் அறிமுகம் செய்யப் பட்டமை)

பொதுவாக நூல் விற்பனை அதிகரித்துக் காணப்பட்டாலும், சிறுவர் நூல்கள் விற்பனையில் வீழ்ச்சி அடைந்துள்ளன. கடந்த பல வருடங்களாகத் தொடர்ச்சியாக விற்பனை அதிகரிப்பு ஏற்பட்ட சிறுவர் நூல்கள் 1994ல் அதற்கு முந்தைய வருடத்தை விட 20 வீதம் குறைவாகவே விற்றன. அதேவேளை பிறமொழிகளில் இருந்து மொழிபெயர்க்கப்பட்ட சிறுவர் நூல்களின் விற்பனை பாதிக்கும் குறைவாக வீழ்ந்து விட்டது. இதேவேளை (வளர்ந்தோர்க்கான) பிறமொழி இலக்கியங்களின் விற்பனை மிக (44 வீதத்தால்) அதிகரித்துள்ளது.

அண்மைக் காலங்களில் நோர்வேயில் மிக அதிகளவில் விளம்பரமாகும் - விற்பனையாகும் பொருள் கணனி விளையாட்டுகள் (Videogames/ Dataspill) தான். சிறுவர்களை மாத்திரமன்றிப் பெரியவர்களையும் ஈர்க்கும் இத்துறை அதிக வருமானம் ஈட்டும் துறை என்பதால், இத்துறையில் ஈடுபடும் நிறுவனங்கள் பலத்த போட்டியில் ஈடுபட்டுள்ளன. இவ்வருடம் மாத்திரம் இத்துறையில் விளம்பரம் சார்ந்த செலவினம் ஒன்றரைக் கோடியாக இருக்கும் என நம்பப்படுகிறது. இரு முக்கிய நிறுவனங்கள் (Sony, Nintendo ) விளம்பர யுத்தத்திலும் வியாபாரப் போட்டியிலும் இறங்கவுள்ளன.




சி.டிகளை அடிப்படையாகக் கொண்டு வரவுள்ள புதிய விளையாட்டுகளுக்காக ( Playstation ) 400கோடி டொலர்கள்வரை முதலிட்டுள்ளது ஸொனி நிறுவனம். ஜப்பானில் இவை பெரும் வரவேற்புப் பெற்றதைத் தொடர்ந்து ஏனைய நாடுகளிலும் இவை அறிமுகப்பட உள்ளன. இதனது விளம்பரங்களுக்காக நோர்வேயில் மாத்திரம் 72லட்சம் குறோணர்களைச் (ஐரோப்பாவில் 53கோடி குறோணர்கள்/ எட்டுக் கோடி டொலர்கள்)செலவிட உள்ளது ஸொனி. இப்போது வரவுள்ள எல்லா விளையாட்டுகளிலும் முக்கியமான அம்சம் அவற்றில் முப்பரிமாண உருவங்கள் விளையாட்டில் ஈடுபடுவது.

www.tamilarangam.net



# கடைசிப்பக்கம்

## தேவை தண்டனை!!

சங்கிலியன

பொதுவாகக் கொலைக்குற்றம் செய்தவருக்கே மரணதண்டனை வழங்கப்படுவது வழக்கம். இன்று அனக நாடுகளில் மரணதண்டனை நீக்கப்பட்டு விட்டது. ஆயினும் அமெரிக்காவில் பல மாநிலங்களில் மரண தண்டனை இன்னும் நடைமுறையில் உள்ளது.

இன்று பல்வேறு நாடுகளில் யுத்தம் நடைபெற்று வருகிறது. இதில் ஐரோப்பாவில் பழைய யூகோஸ்லாவியா இன்று பல்வேறு நாடுகளாகச் சிதறியபின் ஒவ்வொரு இனமும் மற்றொரு இனத்தைத் தாக்கும் நிலை சில இடங்களில் உள்ளது. இதில் சேர்பியர்கள் ஏனைய இனத்தவர்கள் மீது கடும்போர் தொடுத்துள்ளனர். அத்துடன் பெரும்பாலான அப்பாவி மக்களைப் படுகொலை செய்துள்ளனர். இதையடுத்து அமெரிக்காவும், பல மேற்கு நாடுகளும் படுகொலைகளுக்குக் காரணமானவர்கள் உலக நீதிமன்றத்தில் நிறுத்தி விசாரிக்கப்பட்டுத் தண்டிக்கப்பட வேண்டும் எனக் கோரிச் செயலிலும் இறங்கியுள்ளன.

மறுபுறத்தில் வியட்நாம் போரில் வியட்நாம் வெற்றி அடைந்ததை நினைவுகூரும் சம்பவம் ஏப்ரல் 30ல் கொண்டாடப் பட்டது. இதன் நினைவு அமெரிக்காவிலும் நிகழ்ந்தது.

வியட்நாம் மீதான கடும் போரைத் தொடுத்த அமெரிக்கா முப்பதுலட்சம் மக்களைக் கொன்று போட்டது. இதுபற்றி யாரும் கதைப்பார் இல்லை.

இது மட்டுமல்ல உலகின் பல போர்களிலும் இதே கதைதான். ஈழத்தமிழர் மீதான படுகொலை செய்யும் இலங்கை அரசோ அல்லது அதனது படைகளோ உலக ரீதியாக ஏற்றுக் கொள்ளக்கூடிய பொது அமைப்பு ஒன்றினால் விசாரிக்கப்படுவது அவசியம்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

## JA, JEG BESTILLER VALGBROSJYRE

| | | |
|---|---|---|
| Norsk ---------- eks | Somali ---------- eks | Polsk ---------- |
| Engelsk ---------- eks | Serbo-kroatisk ---------- eks | Vietnamesisk ---------- |
| Fransk ---------- eks | Tamil ---------- eks | Tyrkisk ---------- eks |
| Spansk ---------- eks | Persisk ---------- eks | |
| Urdu ---------- eks | Punjabi ---------- eks | VALGPLAKAT ------ EKS |
| Arabisk ---------- eks | Finsk ---------- eks | |

# நீங்கள் 11ம் திகதி புரட்டாதி மாதம் வாக்களிக்க விரும்புகிறீர்களா?

புரட்டாதி மாதம் 11ம் திகதி திங்கட்கிழமை நகராட்சிமன்ற மற்றும் மாகாண ஆட்சிமன்றத் தேர்தலாகும்.

- வெளிநாட்டுப் பிரஜாவுரிமை உள்ளவர்கள் கூட வாக்களிக்கலாம். ஆண்களும் பெண்களும் வாக்களிக்கலாம். வாக்களிப்பதற்கு கடந்த 3 வருடகாலம், ஆகட்பிந்தியது 9ம் திகதி புரட்டாதி மாதத்திலிருந்து நீங்கள் ஆள்பதிவுக் காரியாலயத்தில் (folkeregister) பதியப்பட்டிருத்தல் வேண்டும். 31.12.95 இற்குள் நீங்கள் 18 வயதை அடையவேண்டும்.
- நீங்கள் ஓர்நகரசபையிலிருந்து வேறொன்றிற்கு இடம்பெயர்ந்திருந்தால் ஆனி மாதம் 1ம் திகதிக்குள் இடமாற்றத்தை ஆள்பதிவுக்காரியாலயத்திற்கு அறிவிக்கவேண்டும். இப்படியானால் நீங்கள் இப்போது வசிக்கும் நகரசபையில வாக்களிக்கலாம்.
- நீங்கள் இடமாற்றத்தை அறிவிக்காவிடின் தேர்தல் தினத்திலன்று உங்களது முன்நாள் நகரசபையில் வாக்களித்தல்வேண்டும்.
- முன்கூட்டி வாக்களிப்பதை நீங்கள் விரும்பிய நகரசபையில் நிறைவேற்றிக்கொள்ளலாம்.

தேர்தல் தினத்திலன்று வாக்களிப்பதற்கு வாய்ப்புக்கிடைக்காவிடின் நீங்கள் முன்கூட்டியே வாக்களிக்கலாம். நீங்கள் எங்கு, எப்போது மற்றும் எவ்வாறு முன்கூட்டி வாக்களிப்பது என்பதை நகரசபைக்கட்டடத்தில் தெரிந்துகொள்ளலாம். வாக்களிக்கும்பட்சம் எவ்வாறு செயற்படவேண்டும் என்பதுபற்றிய தகவல் 15 மொழிகளில் வெளியிடப்பட்டுள்ளது. கீழுள்ள விண்ணப்பத்தை அனுப்பி இவற்றைப் பெற்றுக்கொள்ளலாம்.

VALG '95

**மேலதிக விபரங்களிற்கு நகரசபைநிர்வாகத்துடன் தொடர்புகொள்ளவும்!!!**



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்